
புதுமலர்: 14 இதழ்: 01 தை - மாசி

# அனல்

01.01.2017

அசதியாயிராமல் ஜாக்கிரதையாயிருங்கள்
ஆவியிலே அனலாயிருங்கள்:
கர்த்தருக்கு ஊழியம் செய்யுங்கள்.
- ரோமர் 12:11 -



இதோ,
திறந்தவாசலை
உனக்கு முன்பாக
வைத்திருக்கிறேன்,
அதை ஒருவனும் பூட்டமாட்டான்.
வெளிப்படுத்தல் 3:8

சீயோன் தேவாலயம் பிரசுரம் Zion Church Publication

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பக்கம்: 36 ஆண்டு: 2017 ஆசிரியர்: வே.மகாராஜா

## பொருளடக்கம்

01. அனலின் சத்தம்
02. கவிதை - வருகவே புதுவருடமே
03. அனலின் புத்தாண்டு வாக்குத்தத்த செய்தி
04. கதையும் கற்றதும் - புதிய பார்வை
05. வாலிபர் வளாகம் - எழுப்புதலுக்கான இதயக்கதறல் - பாகம் 10
06. அவர் இங்கே இல்லை; அவர் உயிர்த்தெழுந்தார்
07. பெண்கள் பக்கம் - அழகாய் நிற்கும் ரோஜா மலர்
08. நற்செய்திப்பகுதி - நீங்கள் விசேஷித்தவர்கள்
09. தேவ பணியாளர் பட்டறை
10. சிறுவர் வட்டம் - உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன்
11. அருட்பணியாளர் சரிதை - ஜேம்ஸ் ஹன்னிங்டன், மட்சுக்கோ
12. வினா விடை - 79
13. குறுக்கெழுத்துப்போட்டி - 77



## ஜெப வேண்டுதல்

வியாதியினாலும், வேதனையினாலும், குடும்ப பிரச்சினையினாலும் கலக்கமுற்று என்ன செய்வது என்று அறியாமல் திகைக்கும் தாயே, தந்தையே, சகோதரனே, சகோதரியே கலக்கம் வேண்டாம். உங்கள் பிரச்சினைகளையும் தேவைகளையும் எங்களுக்கு எழுதுங்கள். உங்களுக்காக ஜெபிப்போம்.

### எழுத வேண்டிய முகவரி:



சீயோன் ஜெபக்குழு,
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.



**Zion Prayer Group,**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

### மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

ஆசிரியர் "அனல்",
347, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம், இலங்கை.




**The Editor "Anal",**
**347, Navalar Road,**
**Jaffna, Srilanka.**

*T.P.: 0094(0) 21-222 2707 e-mail: jazion@sltnet.lk*

திக்கற்றவர்களாய் போகும் உன் பிள்ளைகளை ஒப்புவி, நான் அவர்களை உயிரோடே காப்பாற்றுவேன். உன் விதவைகள் என்னை நம்புவார்களாக - எரேமியா 49:11 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அனலின் சத்தம்




அனல் வாசக உள்ளங்களுக்கு எனது புத்தாண்டு நல்வாழ்த்துக்கள் உரித்தாகு வதாக. 2017ஆம் ஆண்டுக்குள் எம்மை அழைத்து வந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்து வுக்கு சகல மகிமையும் உண்டாவதாக. கடந்த ஆண்டு முழுமையும் தேவன் செய்த ஒவ்வொரு நன்மைக்கும், நடத்தி வந்த அவருடைய சித்தத்தின்படி யான பாதைகளுக்காகவும் அவருக்கே நன்றி கூறுகின்றோம். **2016ம் ஆண்டு தடையின்றி "அனல்" உங்கள் கரங்களில் கிடைப்பதற்கு தேவன் உதவி செய்தார்.** அனல் மூலம் நீங்கள் பெற்ற ஒவ்வொரு ஆசீர்வாதங்கங்களுக்காகவும் தேவனை ஸ்தோத்தரிக்கிறோம்.

ஆண்டுகள் செல்லும் போது நாம் ஒன்றை நினைத் துக் கொள்ள வேண்டும்: **ஆண்டவர் இயேசு வரப்போகிறார்** என்பதை. வேதம் சொல்கிறது: **அப்போஸ்தலர் 1:9-11 (9.) இவைகளை அவர் சொன்னபின்பு, அவர்கள் பார்த்துக் கொண்டிருக்கையில், உயர எடுத்துக்கொள்ளப்பட்டார்: அவர்கள் கண்களுக்கு மறைவாக ஒரு மேகம் அவரை எடுத்துக்கொண்டது. 10. அவர் போகிறபோது அவர்கள் வானத்தை அண்ணாந்து பார்த்துக் கொண்டிருக்கையில், இதோ, வெண்மையான வஸ்திரந்தரித்தவர்கள் இரண்டுபேர் அவர்களருகே நின்று: 11. கலிலேயராகிய மனுஷரே, நீங்கள் ஏன் வானத்தை அண்ணாந்து பார்த்து நிற்கிறீர்கள்? உங்களிடத்தினின்று வானத்துக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட இந்த இயேசுவானவர் எப்படி உங்கள் கண்களுக்கு முன்பாக வானத்துக்கு**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எழுந்தருளிப்போனாரோ, அப்படியே மறுபடியும் வருவார் என்றார்கள்.** உலகம் ஏதேதோ முயற்சிகளும், வளர்ச்சிகளும் கண்டு வரும் இந் நாட்களில், மறுபடி வரப் போகிற இயேசு கிறிஸ்துவுக்காக நாம் எத்தனை பேர் நம்மை ஆயத்தப்படுத்துகிறோம்? இயேசு சொன்னார்: **நீங்கள் நினையாத நேரத்தில் மனுஷகுமாரன் வருவார், ஆகையால் நீங்களும் ஆயத்தமாயிருங்கள்.**

சகோதரர்களே, இப் புதிய ஆண்டில் கிறிஸ்துவை எதிர்பார்த்தவர்களாய், எப்போதும் பரிசுத்தத்துடன் அவருடைய விருப்பத்தை நிறைவேற்றும் பிள்ளைகளாய் வாழுங்கள்.

**இப் புதிய ஆண்டு தேவனோடு உள்ள உறவில் பெலப்படும் ஆண்டாக இருக்க அனலின் வாழ்த்துக்கள்.**

- ஆசிரியர் -




**இப் புதியாண்டில் புதுமணம் பரப்பி, கிறிஸ்து புகழ் பாடி, இழப்பில் நிறைவு பெற்று, தோல்வியில் வெற்றி கண்டு, நொந்து நொடிந்து போன இதயங்கள் தெய்வீக சமாதானம் பெற்று வாழவும்; பெலவீன நேரங்களில் பெலன், துன்ப நேரங்களில் இன்பம், வறுமையில் ஆசீர்வாதங்கள் பெற்று, இயேசு கிறிஸ்துவுக்குள் எப்போதும் சந்தோஷமாய், கர்த்தருடைய வசனத்தில் பிரியமாய், தேவ வழியில் செம்மையாய் சென்று, தேவனோடு இடையறாத உறவு கொண்டு ஆவியின் கனி நிறைந்த வாழ்வு வாழ அனலின் வாழ்த்துக்கள்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வருகவே புதுவருடமே!

நாங்கள் ஆவலாய் வரவேற்கிறோம்
தேவ வல்லமை சுமந்து வருக
தேவ கிருபை சுமந்து வருக
தேவ சித்தத்தை நம் வாழ்விலே
பூரணமாக்கிடவே

ஓ! வருடமே புதுவருடமே
உன்னை தந்தவர் உன்னில் மகிழ்ந்திட
மணவாளனின் வருகைக்கு
எம்மை ஆயத்தமாக்கிடுவாய்

வளரட்டும் வளரட்டும் நம்மிலே தேவ ராச்சியம் – உன்னில்
பெருகட்டும் பெருகட்டும் ஆத்துமா – சபைகளிலே
சத்துரு தோற்றுப்போகவே தேவ பிள்ளைகள் ஜெயம் கொள்ளவே
தேவ நீதி எங்கும் நிறைவேறவே நம்மில் தேவ அன்பு பெருக்கெடுக்கவே
நீ வருகவே, புதுவருடமே – நீ வருகவே

முடிவு காலங்கள் நெருங்கிடுதே
தேவன் கிருபையாய் கொடுக்கும் வருடமே
நாம் கணக்கு கொடுக்கும் செயல்கள் உனக்குள் அறிவோமே
நீ சுமந்து வரவேண்டும் தேவ பாரத்தை
அதை நம்மிடை நிறைவேற்றிடு கிறிஸ்துவின் ஆத்தும நாகத்தை
இதயக் கனத்துடன் நம்மில் உணர்ந்திடு மாம்சிகம் ஒழிந்து போகவே

மனித சித்தங்கள் சிதறிப்போகவே விரைந்துவந்த புதுவருடமே
துக்க நாட்கள் முடிந்து போகட்டும் நிந்தைகள் கலைந்து போகட்டும்
வெட்கத்தின் தலைகள் நிமிரட்டும் மகிழ்கிறோம் உன் வரவால்
பேருவகை உன்னைக் காண்பதில் இன்று உலகமே கொண்டாடுதே
நீ வருகவே புது வருடமே நீ வருகவே!.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்.**
**வெளிப்படுத்தல் 3:8b**

ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் பிறந்திருக்கும் இப் புதிய வருடத்தில் அனல் வாசகர்களுக்கு 2017ஆம் வருட புத்தாண்டு வாழ்த்துக்களையும் ஆசீர்வாதத்தையும் தெரிவிப்பதில் மிக்க மகிழ்ச்சியடைகிறேன்.

கடந்த 2016 ஆண்டு பல பிரச்சினைகள், போராட்டங்கள், நிந்தனைகள், அவமானங்கள், தோல்விகள், அமிழ்ந்து போய்விடுவோமா என்று எண்ணக்கூடிய புயல்கள் போன்றவற்றின் மத்தியிலும் கடந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு வாக்குத்தத்தம்; **செப்பனியா 3:15b இஸ்ரவேலின் ராஜாவாகிய கர்த்தர் உன் நடுவிலே இருக்கிறார்; இனித் தீங்கைக் காணாதிருப்பாய்** என்று கர்த்தர் நமக்கு கொடுத்து, கொடுத்த வார்த்தைக்கு உண்மையுள்ளவராயிருந்து தீங்கு எல்லாவற்றின் நடுவிலும் கர்த்தர் மையமாக இருந்து நம்மை வழிநடத்தியபடியால் தேவாதி தேவனை துதிக்கிறேன். **அனேகருடைய சாட்சிகளை கேள்விப்பட்டதன் மூலம் தேவன் இவ் வார்த்தையை உறுதிப்படுத்தினார் என்பதை ஆணித்தரமாய் விசுவாசிக்கிறேன்.**

**இன்று பிறந்திருக்கும் இப் புதிய ஆண்டில் கர்த்தர் நமக்கு கொடுக்கும் வாக்குத் தத்த வசனம் என்னவெனில்; வெளிப்படுத்தல் 3:8b இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்.**

திவ்விய வாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் முதல் மூன்று அதிகாரங்களையும் அவதானித்தால் அதில் திருச்சபைகளைக் குறித்து கூறப்படுவதை அவதானிக்கலாம். அங்கே ஏழு விதமான திருச்சபைகளைக் குறித்து கூறப்பட்டிருந்தாலும், இப்படிப்பட்ட ஒரு அருமையான வாக்குத்தத்த வார்த்தை ஒரே ஒரு திருச்சபைக்கு மாத்திரமே கொடுக்கப்பட்டுள்ளதை நாம் அவதானிக்க முடியும். ஆகவே இதிலிருந்து நமக்கு புலப்பட வேண்டிய ஒரு காரியம்: இந்த அற்புதமான **வெளிப்படுத்தல் 3:8b இதோ, திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்** என்ற வாக்குத்தத்தம் எல்லோருக்கும் உரிய ஒன்று அல்ல. மாறாக இது ஆண்டவர் எதிர்பார்க்கும் வண்ணம் 2017ஆம் ஆண்டில் வெளிப்படுத்தலில் குறிப்பிடப்பட்டுள்ள இத் திருச்சபையின் குணாதிசயங்களை போன்று நமது வாழ்வும் இருக்க வேண்டும் என்று தீர்மானம் எடுப்பவர்களுக்கு மட்டுமே இந்த உயரிய உன்னத வாக்குத் தத்தை ஆண்டவர் கொடுக்கிறார்.

*எனவே எனக்கு அன்பார்ந்தவர்களே இந்த 2017ஆம் ஆண்டு உங்களுக்கு முன்னால்; "திறந்த வாசல்" காணப்பட வேண்டுமாயிருந்தால் உங்களிடத்தில் ஆண்டவர் எதிர்பார்க்கிற சில காரியங்கள் காணப்பட வேண்டும். அவைகளைக் குறித்து ஆராய்ந்து பார்க்கலாம்.*

## 01. அன்பு காணப் பட வேண்டியது அவசியம்

*வெளிப்படுத்தலில் கூறப்பட்டுள்ள இவ் வாக்குத்தத்தில் குறிப்பிடப்பட்ட திருச்சபை ஆறாவது திருச்சபையான பிலதெல்பியா திருச்சபையாகும்.*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளிப்படுத்தல் 3:7 பிலதெல்பியா சபையின் தூதனுக்கு எழுதவேண்டியது என்னவெனில்: பரிசுத்தமுள்ளவரும், சத்தியமுள்ளவரும், தாவீதின் திறவுகோலை உடையவரும், ஒருவரும் பூட்டக்கூடாதபடிக்குத் திறக்கிறவரும், ஒருவரும் திறக்கக்கூடாதபடிக்குப் பூட்டுகிறவருமாயிருக்கிறவர் சொல்லுகிறதாவது: "பிலதெல்பியா" என்ற வார்த்தைக்கு அர்த்தம்: "சகோதர அன்பு".** எனவே நம்மிடத்தில் அன்பு காணப்பட வேண்டும் என்பது மிகவும் அவசியம்.

இன்றைக்கு நாம் வாழ்ந்து வரும் காலம் கடைசிக்காலமாய் இருக்கிறது. அனேகருடைய அன்பு தணிந்து போகிறதை இக் கால கட்டத்தில் நாம் சாதாரணமாக காணக்கூடியதாக இருக்கிறது. சகோதர அன்பு என்று கூறும் போது; வெறும் உணர்வு, உணர்ச்சி பற்றி குறிப்பிடாமல் இந்த சகோதர அன்பு செயற்படுகிறது என்றால் அது கிரியையினால் காண்பிக்கப்பட வேண்டும். **கொலோசெயர் 3:14 இவை எல்லாவற்றின்மேலும், பூரண சற்குணத்தின் கட்டாகிய அன்பைத் தரித்துக்கொள்ளுங்கள்.** நாம் ஒவ்வொருவரும் அன்பை தரித்துக் கொண்டவர்களாய் ஒரிவரிலொருவர் அன்பு கூரக்கடமைப் பட்டிருக்கிறோம். சக மனிதர்களுக்கு இறுதியாக எப்போது நாம் தியாக பூர்வமாக செயற்பட்டோம்? என்று ஆராய்ந்து பார்த்தோமாக இருந்தால் அன்றைக்குத் தான் நாம் உண்மையில் கடைசியாக அன்பு செலுத்திய நாள்.

ஆகவே இவ் 2017ஆம் ஆண்டில் தியாக பூர்வமான அன்பின் கிரியைகள் நம்மிடம் வெளிப்படும் போது ஆண்டவர் **"திறந்த வாசலை நமக்கு முன்பாக வைத்திருக்கிறார்" என்பதை புரிந்து கொள்ளுங்கள்.**

## 02. கிறிஸ்துவின் நாமத்தை மறுதலிக்காமல் இருக்க வேண்டும்.

**வெளிப்படுத்தல் 3:8b நீ என் நாமத்தை மறுதலியாமல், என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான். "நீ என் நாமத்தை மறுதலியாமல்"** என்று குறிப்பிடப்படுவதனை இவ் வசனத்தில் காணலாம். கிறிஸ்துவுக்கு சாட்சிகளாக இருக்க நாம் அழைக்கப்பட்டிருக்கிறோமேயொழிய ஒரு போதும் கிறிஸ்துவையோ அவருடைய நாமத்தையோ மறுதலிக்கக்கூடாது. **லூக்கா 22:61 அப்பொழுது கர்த்தர் திரும்பி, பேதுருவை நோக்கிப்பார்த்தார். சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை மூன்றுதரம்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மறுதலிப்பாய் என்று கர்த்தர் தன்னிடத்தில் சொன்ன வசனத்தை உடனே பேதுரு நினைவுகூர்ந்து.** பேதுரு இயேசு கிறிஸ்துவை அறியேன் என்று தன்னுடைய வாயினால் மறுதலித்ததை நினைவு கூர்வதை இங்கே காணலாம்.

மூன்றரை வருடங்களாக இயேசு கிறிஸ்துவோடு இருந்து, பார்த்து, கற்றுக் கொண்டு எல்லாவற்றையும் அறிந்த இந்த பேதுரு அவர் பிடிக்கப்பட்டு, விசாரணைக்கு கொண்டு போகப் படுகிற போது தனக்கும் இப்படிப்பட்ட நிலை வந்துவிடக் கூடாது என்று இயேசுவோடு தனக்கு தொடர்பு இல்லை என்று காண்பிக்க முற்படுகிறான். பேதுரு பகிரங்கமாக வாயினாலே மறுதலித்தான். **ஆனால் பல வேளைகளில் நாமோ இப்படிப்பட்ட பகிரங்க மறுதலிப்பை செய்வதற்கு தயக்கப்பட்டாலும் மறைமுகமாக நம்முடைய செயற்பாடுகள், நடை, உடை, பாவனை மூலம் கிறிஸ்துவை மறுதலிக்கிறோம். இதுவும் நம்முடைய வாழ்க்கையில் பாரிய பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்பதை உணர்ந்து கொள்வதில்லை.**

கிறிஸ்துவை உடையவர்களாகிய நாம் அந்தரங்கமாகவோ, வெளியரங்கமாகவோ ஒரு போதும் கிறிஸ்துவின் நாமத்தை மறுதலிக்காமல் இருந்தால் தான் 2017ஆம் ஆண்டில்; "திறந்த வாசல் நமக்கு முன்பாக இருக்கும்".

## 03. தேவனுடைய வசனத்தைக் கைக்கொள்ள வேண்டும்

இந்த திறந்த வாசல் வாக்குத்தத்தம் கூறப்பட்டுள்ள இந்த சபையில் அடுத்தாக காணப்பட்ட காரியம்: **வெளிப்படுத்தல் 3:8b என் வசனத்தைக் கைக்கொண்டபடியினாலே, இதோ, திறந்தவாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன், அதை ஒருவனும் பூட்டமாட்டான்.** நாம் கைக்கொள்ள வேண்டிய அனைத்து வார்த்தைகளையும் ஆண்டவர் வேதாகமத்தில் தெளிவாக குறித்து வைத்துள்ளார். அதை நன்றாக அறிந்திருக்கிறோம், வாசித்திருக்கிறோம். ஆனால் அதைக் கைக்கொள்வதில் பல கிறிஸ்தவர்கள் பின்நிற்கிறார்கள். பல சந்தர்ப்ப சூழ்நிலைகள் எழும் போது நமக்கு சாதகமான ஒரு சில வசனங்களை பிடித்துக் கொள்வோம். **நாம் வசனத்தை வசனமாக கைக்கொள்ள அழைக்கப்பட்டிருக்கிறோமேயொழிய அதனை விமர்சிக்கவும், வீண் பேச்சுக்கும், வாக்குவாதங்களுக்கும் நாம் அழைக்கப்படவில்லை.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆகவே நாம் சரியான முறையில் வார்த்தையைக் கைக் கொண்டு. அதற்கு கீழ்ப்படிந்து வாழ்கிற போது தான் இவ் 2017ஆம் ஆண்டில்: **"திறந்த வாசல் உங்களுக்கு முன்பதாக காணப்படும்".**

எனவே பிரியமானவர்களே, **"இதோ திறந்த வாசலை உனக்கு முன்பாக வைத்திருக்கிறேன்; அதை ஒருவனும் பூட்டமாட்டான்"** என்கிற மகத்தான வாக்குத்தத்தம் சகோதர அன்பு காணப்படுகின்ற, கிறிஸ்துவின் நாமத்தை மறுதலிக்காமல், ஆண்டவருடைய வார்த்தையை கைக்கொள்கிற திருச்சபைக்கு மட்டும் கொடுக்கப்பட்டதாகும். இந்த தனித்துவமான வாக்குத்தத்தம் 2017ஆம் ஆண்டில் உங்கள் வாழ்க்கைக்கு அவசியமானால் சகோதர சிநேகமுள்ளவர்களாய் காணப்பட வேண்டும். எப்படிப்பட்ட சந்தர்ப்ப சூழ்நிலைக்கு முகம் கொடுத்தாலும் கிறிஸ்துவின் நாமத்தை மறுதலிக்காமல் தேவனுடைய வசனத்தை இருக்கிற வண்ணமாகவே கைக் கொண்டு வாழுங்கள்.

வேதாகமத்தில் எஸ்தர் புத்தகத்திலே எஸ்தர் ராஜாத்தியின் சம்பவத்தை பார்ப்போமாக இருந்தால்; **எஸ்தர் 4:12 தொடக்கம் எஸ்தர் 5:3 வரைக்கும்** பார்த்தால்: தன் குலஜனங்களான யூதருக்கு ஆபத்து உண்டு என்பதை அறிந்து கொண்ட எஸ்தர் ராஜாவினிடத்தில் பிரவேசிக்கும் அனுமதி கிடைக்காதிருந்தும் தன் குலம், இனத்தின் மீது வைத்திருந்த அன்பின் நிமித்தமாக தான் அவ் இனத்தைச் சேர்ந்தவள் என்பதை மறுதலிக்காமல், **அவளுக்கு எல்லாவற்றிற்கும் எல்லாமுமாக இருக்கும் அவளுடைய வளர்ப்பு தந்தையாகிய மொர்தெகாயின் வார்த்தைகளைக் கைக்கொண்டபடியினால் துணிந்து ராஜாவினிடத்திற்கு பிரவேசித்த போது ராஜாவின் கண்களில் கிருபை கிடைக்கத்தக்கதாக அவளுக்கு: "திறந்த வாசல்" காணப்பட்டது.**


இன்னும் ஓர் உதாரணத்தை காண்பிக்க விரும்புகிறேன். நெகேமியா முதலாம் அதிகாரத்தில் எருசலேமின் அலங்கம் இடிக்கப்பட்டதையும் அதன் வாசல்கள் அக்கினியால் சுட்டெரிக்கப்பட்டதையும் கேள்வியுற்ற நெகேமியா தன் ஜனத்தின் மேலும், பட்டணத்தின் மேலும் வைத்திருந்த அன்பினால் துக்கித்து, அழுது உபவாசிப்பதை நாம் காண்கிறோம். சூசான் அரண்மனையில் நெகேமியா பானபாத்திரக்காரனாய் சௌகரியமாய் இருந்தாலும் தானும் அந்தப் பட்டணத்திற்குரியவன் என்பதை மறுதலியாமல் தன் ஜனத்தின் மேலும், தேசத்தின் மேலும் அன்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்ந்தவனாய் நானும் என் தகப்பன் வீடும், ஜனங்களும் பாவம் செய்தோம் என்பதை அறிக்கையிட்டு இனி உம்முடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடப்போம் என்று தீர்மானம் எடுத்த போது ராஜாவின் கண்களில் நெகேமியாவுக்கு கிருபை கிடைத்தது. அந்த தேசத்தை மீண்டும் கட்டி, அலங்கத்தை சரிப்படுத்துவதற்கு அவனுக்கு முன்பாக "திறந்த வாசலை" ஆண்டவர் வைத்திருந்தார்.

எனவே எனக்கு அன்பார்ந்தவர்களே, வேதாகமத்தில் இருந்து மேல் கூறப்பட்டுள்ள இரண்டு உதாரணங்களினதும் அடிப்படையில் இந்த 2017ஆம் ஆண்டில் நம்முடைய வாழ்க்கையிலே அன்பை கிரியையினால் வெளிப்படுத்துகிறவர்களாய், கிறிஸ்துவை – கிறிஸ்துவின் நாமத்தை மறுதலியாமல், ஆண்டவருடைய வார்த்தையை - கற்பனைகளை கைக்கொண்டவர்களாய் வாழ்வோம் என தீர்மானம் மேற்கொள்ளும் அனைவருக்கும் ஆண்டவர் "திறந்த வாசலை வைத்திருக்கிறார்".

போதகர் ஜோஹணன்
டேவிஸ் பிலிப்,
தலைமைப் போதகர்,
சீயோன் தேவாலயம்,
யாழ்ப்பாணம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




வை. விமலதாஸ்




## அருமையானவர்களே அன்பின் புதுவருட வாழ்த்துக்கள்!

ஒரு பெரிய பல்நோக்குக் கம்பனி ஒன்றில் ஸ்டீபன், ரைற்றஸ் ஆகிய இரு அதிகாரிகள் இருந்தனர். அவர்கள் இருவரும் ஆரம்பத்தில் இருந்தே சிறிய பதவியில் இருந்து படிப்படியாக உயர்ந்து இப்போது அதிகாரிகளாய் மாறிவிட்டார்கள். இப்போது இவர்களில் ஒருவரை அந்த கம்பனியில் வெற்றிடமாக காணப்படும் அதி உயர் பதவியில் நியமிக்க வேண்டும். அந்த இருவரும் வேலையின் அனுபவத்தில் ஒரே தகமையைக் கொண்டிருந்தார்கள். அத்துடன் இவர்களது படிப்பு தகுதிகளும் நன்றாக இருந்தது. ஆனாலும் இவ் இருவரில் ஒருவரைத் தான் அந்த பதவிக்கு தெரிந்து எடுக்க வேண்டும். எனவே இவர்களில் யாரைத் தெரிவு செய்வது என்று அந்த கம்பனியின் மேலதிகாரிகள் குழப்பத்தில் இருந்தார்கள். அப்போது அந்த கம்பனியின் பணிப்பாளருக்கு ஒரு யோசனை தோன்றியது. எனவே அவர் அந்த இருவரையும் அழைத்து: "உங்கள் இருவருக்கும் ஒரு செயல்முறைப் பரீட்சை இடம்பெறவிருக்கிறது, இப் பரீட்சையில் வெற்றி பெறுபவர் குறித்த உயர் பதவியில் அமர்த்தப்படுவார்" என்றார். அந்த கம்பனிக்கு பல தேசங்களில் கிளைகள் இருந்தது அத்துடன் அவர்களது பிரதான வியாபாரம் பாதணிகளை உற்பத்தி செய்து விற்பனை செய்வது, எனவே அந்த இருவருக்கும் ஒரு நாட்டில் உள்ள ஒரு ஊரைக் காண்பித்து அங்கே எமது தொழிற்சாலை ஒன்றை ஆரம்பித்து அங்கே சப்பாத்துக்களைத் தயாரித்து, விற்பனை நிலையங்களை ஆரம்பித்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விற்பனையை ஆரம்பிக்க வேண்டும். ஆகவே அங்கே சென்று அந்த இடத்தை குறித்து ஆய்வு செய்து அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறினார்.

அத்துடன் அங்கே இருவரும் சேர்ந்து செல்ல முடியாது, முதலில் ஸ்டீபன் சென்று அறிக்கையை தயாரிக்க வேண்டும். அதற்கு பின் ரைற்றஸ் சென்று அதே ஆய்வை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று கூறினார். ஆகவே ஸ்டீபனை அழைத்து நீங்கள் சென்று அந்த நாடு எப்படிப்பட்டது, அந்த இடம், அங்கே வாழும் மக்கள் எப்படி, நாம் எப்படி தொழிற்சாலையை ஆரம்பிப்பது, எங்கே புதிய கடைகளை ஆரம்பிப்பது என்று ஆய்வு செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்றார். அதே போன்று அவர் சென்று வந்த பின் ரைற்றசும் சென்று அதே ஆய்வை செய்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என்று சொல்லி அனுப்பி வைத்தார்.

அவ்வாறே ஸ்டீபன் சென்றார், அவர் அங்கே இடங்களை சுற்றிப்பார்த் தார், தகவல்களை சேகரித்து அவைகளை அறிக்கையாக தொகுத்து சமர்ப்பித்தார். பின்னர் ரைற்றசும் சென்று அந்த இடத்தை சுற்றிப்பார்த்து தகவல்களை சேரித்து அவரும் தன்னுடைய அறிக்கையையும் சமர்ப்பித்தார். அப்போது அந்த பணிப்பாளர் தமது முகாமைத்துவ குழுவை அழைத்தார், அந்த இருவரையும் கூட அழைத்து தனது அறைக்குள் உட்கார வைத்தார். பின்னர் ஸ்டீபனின் அறிக்கையை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார். அவ் அறிக்கையில், "அந்த ஊருக்கு நான் சென்றேன், அவ் இடம் முழுவதையும் சுற்றிப்பார்த்தேன், அந்த இடம் மிகவும் பின்தங்கிய இடமாக இருந்தது. அங்கே அனேக மக்கள் வசித்து வருகின்றார்கள். ஆனால் அது முன்னேற்றம் இல்லாத இடமாகவே இருக்கிறது. அத்தோடு மிக முக்கியமாக அங்கே அதிகமான மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள், ஆனால் அவர்களில் யாரும் கால்களுக்குச் சப்பாத்து அணிவதில்லை. சப்பாத்து என்றாலே அவர்களுக்கு என்னவென்று தெரியாது. அவர்கள் அனைவரும் வெறும் காலுடன் தான் நடமாடுகிறார்கள். ஆகவே அங்கே சப்பாத்து விற்பனை செய்யும் கடைகளை ஆரம்பிப்பது மிகப்பெரிய தவறு. ஏனென்றால் அங்கே வாழ்கின்ற யாரும் சப்பாத்துக்களை அணியாமையினால் அவற்றை அங்கே விற்பனை செய்ய முடியாது, அவ்வாறு செய்தால் கம்பனி நஷ்டமடையும்" என்று குறிப்பிட்டிருந்தார்.

இதற்கு பின் ரைற்றஸ் எப்படி அறிக்கை சமர்ப்பித்திருக்கிறார் பார்ப்போம் என்று அவருடைய அறிக்கையை எடுத்து வாசிக்க ஆரம்பித்தார். ரைற்றசின் அறிக்கையிலும் ஸ்டீபன் எப்படி குறிப்பிட்டிருந்தாரோ அதே விதமாகவே அவரது அறிக்கையும் காணப்பட்டது. "அந்த ஊர் எப்படிப்பட்டது, அதன் காலநிலைகள், மக்கள் தொகை, போக்குவரத்து வசதிகள் என்று ஒரே விதமாகவே அவரது அறிக்கையும் காணப்பட்டது. ஆனால் இறுதியாக அவர் தனது அறிக்கையில் மிக முக்கியமான காரியத்தை வெளிப்படுத்தியிருந்தார். அதாவது; அந்த ஊரில் யாருமே காலுக்கு சப்பாத்து அணிவதில்லை. அவர்களுக்கு சப்பாத்து என்றாலே என்னவென்றும் தெரியாது. எங்கு சென்றாலும் வெறுங்காலுடன் தான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடமாடுகிறார்கள். ஆகவே அங்கே நாம் கடைகளை ஆரம்பித்தால் நன்றாக வியாபாரத்தை நடத்தலாம். அங்கே இருக்கின்ற யாருமே சப்பாத்தை அணியாமல் இப்போது இருக்கிறபடியால் நாம் அங்கே கடைகளை திறந்து அவர்கள் அனைவருக்கும் சப்பாத்தை விற்பனை செய்து எமது வியாபாரத்தை முன்னேற்ற லாம், வேறு இடங்களில் இருக்கும் எமது கடைகளில் மற்றைய பொருட்களுடன் போட்டி போட்டுத் தான் விற்பனை செய்கிறோம். ஆனால் இவ் இடத்தில் சுலபமாக விற்பனை செய்ய முடியும்" என்று குறிப்பிட்டிருந்தார். அப்போது இவ் இரு அறிக்கைகளையும் பார்த்த அந்த முகாமைத்துவக் குழுவினர் ரைற்றசையே அந்த பதவிக்கு தெரிவு செய்தார்கள்.

ஆம் நண்பர்களே அந்த இருவரும் ஒரே இடத்திற்கு தான் சென்றார்கள், ஒரே நோக்கத்திற்காகத் தான் சென்றார்கள். ஒரே விதமான அறிக்கையைத் தான் சமர்ப்பித்தார்கள். ஆனால் அவர்களின் பார்வை இரண்டும் வித்தியாசமாய் இருந்தது. ஒரே காரியத்தை இரண்டு விதங்களில் இருவரும் பார்த்தார்கள். நாம் ஒவ்வொரு காரியங்களையும் எப்படி பார்த்து எப்படி எடுத்துக் கொள்கிறோமோ அவ்வாறு எமது வாழ்வில் சந்தோஷங்களும் உண்டாகிறது - துக்கங்களும் உண்டாகிறது. இவ் வருடத்தின் ஆரம்பத்தில் வந்திருக்கும் நீங்கள் இவ் வருடம் முழுவதும் எப்படி போகப்போகிறது? என்ன செய்யப்போகிறேன்? என்று கேள்வியோடும் எதிர்மறையான எண்ணத்தோடு காணப்படலாம். ஆனால் இவ் ஆண்டில் தேவன் உங்களுக்கு உங்கள் பார்வையில் மாற்றத்தை ஏற்படுத்துவாராக. எப்போதும் எதிர்மறையாக சிந்திக்காமல் இவ் ஆண்டில் கர்த்தருடைய புதிய பெலத்தோடு கடந்து செல்வோம். **சங்கீதம் 85:12 கர்த்தர் நன்மையானதைத் தருவார்: நம்முடைய தேசமும் தன் பலனைக் கொடுக்கும்.**

## இந்த நொடியை அவிழுங்கள் பார்க்கலாம்!

*பத்திரத்திற்கு அதிகாரத்தை கொண்டு வந்தது:*
*பார்வோனின் அதிகாரத்தை கைமாற்றியது: இது எது?*

*இதற்கான விடையையும் எழுதி அனுப்பி பாராட்டைப் பெற்றுக் கொள்ளுங்கள்.*



**அனல் 2016 கார்த்திகை – மார்கழி மாதங்களில் கேட்கப்பட்ட நொடிக்கான விடை:**

**எறும்பு**

விடைகளை எழுதி அனுப்பிய அனைவருக்கும் எமது பாராட்டுக்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







போதகர் வேதநாயகம் சுமணன்

# சந்தர்ப்பங்களை சரியாய் பயன்படுத்துவோம்

எமது ஆண்டவராகிய இயேசுவின் ஈடு இணையற்ற நாமத்திலே வாழ்த்துகிறேன்.

பிறந்திருக்கும் இப் புதிய ஆண்டிலே தேவகரம் உம்மை பாதுகாத்து, ஆசீர்வதித்து, வழிநடத்துவதாக.

மெய்யான நேர்த்தியான ஓர் எழுப்புதலை ஒவ்வொருவரும் அனுபவிப்பதற்கும், அதைத்தக்க வைத்துக் கொள்வதற்கும் ஏற்ற சரியான பருவம் அது வாலிப பருவமாகும். உன் சொந்த வாழ்விலே, நீ தேவன் விரும்பும் எழுப்புதலை வாஞ்சிப்பவனா(ளா)க இருக்க வேண்டும்.

சத்திய வசனத்தின் வெளிச்சத்திலே தங்கள் வாழ்வில் வந்த சந்தர்ப்பங்களை சரியான முறையில் பயன்படுத்தி அதை வெற்றி வாழ்வாகவும் மாற்றியவர்களின் வாழ்வில் தேவன் விரும்பியதை நிலைநாட்டியதையும் காணலாம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தாவீதின் வேளை

சகோதரர்களின் சுகத்தை விசாரித்து அடையாளம் வாங்கிக் கொண்டு வா என்று தகப்பனாலே அனுப்பப்பட்டவன் தான் தாவீது. ஆனால் அங்கு அவன் போனபோதோ நடந்த சம்பவம், கண்ட காட்சி அவனை தேவனுக்கான வைராக்கியத்தில் இன்னும் அதிகமாய் தூண்டியது.

இஸ்ரவேலர் எல்லாரும் கோலியாத்தைக் காணும் போது மிகவும் பயப்பட்டு, அவன் முகத்திற்கு விலகி ஓடிப்போவார்கள். ஜீவனுள்ள தேவனையும், அவருடைய சேனையையும் நிந்திப்பதற்கு விருத்தசேதனம் இல்லாத இந்த பெலிஸ்தன் எம்மாத்திரம் என்றான்.

தாவீதின் வார்த்தைகள் சவுல் ராஜாவுக்கு அறிவிக்கப்பட்டது. உடனடியாக தாவீது அழைக்கப்படுகிறான் ராஜாவினிடத்திற்கு. **அங்கும் தாவீது தன் தீர்மானத்தில் உறுதியானவனாக இருந்து, நெருக்கமான சூழ்நிலையிலும் கோலியாத் நிந்தித்த தேவனுடைய நாமத்திலே நான் போய் அவனை மேற்கொள்வேன் என்றான்.** இறுதியாக, தனக்கு எதிராக அந்த பெலிஸ்தன் வருகிறதைக் கண்டு தாவீது தீவிரமாய் அந்த சேனைக்கும் அந்த பெலிஸ்தனுக்கும் எதிராக ஓடி தன் கவணிலே கல்லை வைத்து அந்த பெலிஸ்தனுடைய நெற்றியிலே பட எறிந்தான். அந்தக் கல் அவனது நெற்றியிலே பதிந்து போனதினால் அவன் தரையிலே முகம் குப்புற விழுந்தான்.

---

இந்த ஆண்டு ஆரம்பத்திலிருந்தே நீ ஓர் தீர்மானத்திற்குள் வருவாயா? என் வாழ்வில் வரும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் சத்துருவின் ராஜ்யத்தை அதம்பண்ணவும், தேவ ராஜ்யத்தை விஸ்தாரமடையப்பண்ணவும், நிலைநிறுத்தவும் அதை பயன்படுத்துவேன் என்பதாக.

---

இன்றும் இஸ்ரவேலர் எல்லாரும் போற்றும் அளவுக்கு அன்று நடந்த (அல்லது அவன் வாழ்வில் முகம் கொடுத்து வெற்றி பெற்ற) சம்பவம் பேசப்பட்டு தேவனுக்கு நன்றி கூறுகின்றனர்.

## யோசேப்பு சம்மதிக்கவில்லை

சந்தர்ப்பங்களை சரியாய் பயன்படுத்துவோம் என்பது நாம் பாவத்திற்கு எம் வாழ்வில் அனுமதி அளிக்காமையையும், உலகத்தால் கறைபடுவதற்கு ஒருபோதும் அனுமதி கொடுக்காமையையும் காண்பிக்கிறது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாலிபன் யோசேப்புடைய வாழ்வில் பாவம் செய்யும்படியான சூழ்நிலையும் கூடவே அது வெளியாலே தெரியாமல் இருக்கும் என்பதை உறுதிப்படுத்தி நித்தம் நித்தம் அவனை எஜமானின் மனைவி அருட்டின போதும் யோசேப்பு எவ்வளவேனும் இடம் கொடுக்கவில்லை. காரணம்: யோசேப்புக்கு தான் யார் என்பது தெளிவாக தெரிந்திருந்தமையால், தன்னுடைய தேவன் யார், அவர் எப்பேர்ப்பட்டவர் என்பதையும் அவர் எதை நேசிக்கிறார், எதை வெறுக்கிறார் என்பதையும் தெளிவாக அறிந்து உணர்ந்த யோசேப்பு மறுப்பு தெரிவித்து விலகி ஓடியும் விடுகிறான்.

---

அருமையான வாலிப தம்பி, தங்கையரே உன் மீது கண் போட்டு நித்தமும் உன்னை தன் வஞ்சக வலையிலே விழுத்த சத்துரு துடியாய் துடிக்கிறான். வந்து சயனித்துவிடு, பொழுது விடியுமட்டும் இன்பம் காண்போம், புருஷனும்/மனைவியும் வீட்டில் இல்லை, தூரப் பிரயாணம் போனான். பணப்பையை கொண்டு போனான். குறிக்கப்பட்ட நாளிலே வீட்டுக்கு வருவான் என்று சொல்லி, கூடவே என் படுக்கையை வெள்ளைப் போளத்தாலும் சந்தனத்தாலும், இலவங்கப்பட்டையாலும் வாசனை காட்டினேன் என்று சொன்னாலும் இணங்காதே, பாவம் உன்னை தொடரும். அது கொல்லும், நித்தமும் உன் ஆத்துமாவை விசனம் உண்டாக்க உன்னை நிந்திக்கும்.

---

ஆண்டவர் உன்னோடு பேசுகிறார், யோசேப்பை எண்ணிப் பார்! வஸ்திரத்தை அவள் கையிலே விட்டு வெளியே ஓடிப்போனான். ஏறத்தாள பதின்மூன்று ஆண்டுகள் சிறை வாழ்வு. நேரம் வந்தது, எல்லாம் தலை கீழாக மாறியது. யோசேப்பின் அதிகாரத்தை தேவனே உலகம் அறிய உயர்த்தி அனேகரை காக்கும்படியான ஓர் பாத்திரமாக பயன்படுத்தினார். ஆனால் அன்று அவன் தேவனுக்கு விரோதமான பாவத்திலே நான்கு சுவருக்குள்ளே ஈடுபட்டிருந்தால் அவனுடைய நிலை பரிதாபமாக முடிந்திருக்கும். தேவ திட்டம் உன் வாழ்வில் நிறைவேற வேண்டுமானால்.

---

ஒன்றை நன்றாக புரிந்து கொள்: உன் வாழ்வில் வருகின்ற அல்லது ஏற்படுகின்ற சந்தர்ப்பங்களை சரியாய் இனம் கண்டு கொண்டு வேதவசனத்தின்படி நேர்த்தியான முடிவை எடுத்துப்பார். அதுவே உன் வாழ்நாளை சந்தோஷம் நிறைந்ததாகவும், கனியுள்ளதாகவும் மாற்றி மலரச் செய்யும்.

தாவீதும்: யோசேப்பும் மாத்திரமல்ல வேதத்திலே பல பாத்திரங்கள் சந்தர்ப்பங்களை சரியாக கையாண்டு பெரிய விடுதலையை பெற்றுக் கொடுத்திருக்கிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எஸ்தர் - செத்தாலும் சாகிறேன். ராஜாவினிடத்தில் போகிறேன்.

தானியேல் - தன் வழக்கத்தின்படியே மூன்று வேளையும் ஜெபித்தான்.

யோசுவா — ஆசரிப்பு கூடாரத்தைவிட்டு பிரியாமல் தேவனோடு தரித்திருந்தான்.

சமாரியஸ்திரி — தன் குடத்தை வைத்துவிட்டு ஊருக்குள்ளே போய் வந்து பாருங்கள் என்றாள்.

பவுலும் சீலாவும் - தொழு மரத்தில் மாட்டிய நிலையிலும் துதித்து பாடினார்கள்.

பவுல் - சிறையில் இருந்த நிலையிலும் சந்தோஷமாய் இருங்கள். சந்தோஷமாய் இருங்கள் என்று மறுபடியும் உங்களுக்கு சொல்கிறேன்.

அபிகாயில் - நாபாலின் தவறான செயலுக்கு விரைவாக தாவீதிடம் தன்னை தாழ்த்தி மன்னிப்பு கேட்டலும் உணவுப் பண்டங்களைக் கொடுத்தலும்.

சிலுவைக் கள்வன் - இவரோ தகாதது ஒன்றையும் நடப்பிக்க வில்லையே. என்று மற்ற கள்ளனை கடிந்து கொண்டான். உம்முடைய ராஜியத்தில் வரும் போது என்னை நினைத்தருளும் என்றான்.

*கிறிஸ்துவின் விருப்பத்தை நிறைவேற்ற உன் வாழ்வை சிலுவையண்டையும் அவரின் வசனம் அண்டையும் ஒப்படைப்பாயா?*

**வேதமே வெளிச்சம்!**

**வேதமே சத்தியம்!**

**வேதமே நித்தியம்!**

**வேதமே அழியாது!**



*ஜெபிக்கலாமா!*

*அன்பின் இயேசுவே என் வாழ்வில் வரும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களையும் உம் நாம மகிமைக்காக பயன்படுத்த வும் பரிசுத்தத்தை காத்துக் கொள்ளவும் கிருபை தாரும்.*

*ஆமென்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**இயேசு கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலே எங்களுக்கு நம்பிக்கையை உண்டாக்கியிருக்கிறது!**

உன் வாழ்விலும் உயிர்த்த கிறிஸ்துவின் கிரியைகளை நினைத்துப்பார்! அவர் தோமாவை நோக்கி; தோமாவே நீ அவிசுவாசம் உள்ளவனாய் இராமல் விசுவாசம் உள்ளவனாய் இரு. கண்டு விசுவாசிப்பவனைக் காட்டிலும் காணாமல் விசுவாசிக்கிறவன் அதிக பாக்கியவான், உன் விரலை இங்கே நீட்டி என் விலாவிலே போடு என்றார்.

**உன் வாழ்விலும் ஆண்டவர் எதிர்பார்ப்பது; தன்னை (உயிர்த் தெழுந்த என்னை) நீ முற்றுமுழுவதுமாக விசுவாசிக்க வேண்டும் என்பதே.**




மகனே, மகளே இந்த ஆண்டிலும் கூட உன் வாழ்வில் தேவன் செய்யும், அல்லது தேவனால் கூடாத காரியம் ஒன்றும் இல்லை என்று நீ முழு நிச்சயமாய் விசுவாசிப்பாயானால் அதை கண்டு கொள்வாய்.

**விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான் - ரோமர் 1:17**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகாய் நிற்கும் ரோஜா மலர்




**2017ஆம் ஆண்டில் கால் எடுத்து வைத்திருக்கும் அன்பு சகோதரிகளே, புத்தாண்டு வாழ்த்துக்கள்! அனலின் பெண்கள் பகுதியில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி.**

பொதுவாக எல்லாப் பெண்களாலும் விரும்பப்படக்கூடிய மலர் தான் ரோஜா. இந்த ரோஜா மலரில் மிகவும் பிரியங்கொண்ட றோசி தன்னுடைய பொழுதுபோக்காய் ஒரு ரோஜா மலர்த் தோட்டம் வைத்திருந்தாள். தோட்டத்தில் பலவர்ண மலர்கள் காணப்பட்டன. அதிலும் ஒரு செடியில் பலவர்ண ரோஜாச் செடிகள் ஒட்டப்பட்டு அழகாய் ஒரு மரத்தில் பல நிற பூக்கள் பூத்திருக்கும். அத் தோட்டத்தை கடந்து செல்கிறவர்களில் ரோஜா மலரின் வாசனையினால் கவரப்பட்டு, அதின் அழகை ரசித்து கடந்து செல்லாதவர்கள் யாரும் இல்லை என்று கூறலாம். அதுமட்டுமல்ல, றோசி ரோஜா மலரின் தோட்டத்தின் நடுவே அதிக நேரம் செலவழிப்பதால் அவளும் ரோஜா மலர் போன்று அழகாய் இருக்கிறாள். பெயருக்கு ஏற்ப அவள் அழகும் இருக்கும் என்று கூறுவாரும் உண்டு.

இப்படியாக நாட்கள் கடந்து செல்லும் போது, ஒரு நாள் றோசி இல்லாத நேரத்தில் இன்னொருவர் மெதுவாக வந்து ஒரு சில ரோஜா பூக்களைப் பறித்துக் கொண்டு சென்றுவிட்டார். சற்று நேரத்தின் பின் றோசி வந்து பார்த்தாள். ஒரு சில ரோஜா மலர்கள் வெட்டப்பட்டு இருந்ததை கண்டு கொண்டாள். யாராக இருக்கும் என சிந்தித்த படி மெதுவாக அயல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*வீடுகளுக்கு செல்ல முயற்சித்தாள். அவ்வாறு அவள் சென்று கொண்டிருக்கும் போது அவள் தன்னுடைய ரோஜா மலரின் வாசனை வீசுவதை உணர்ந்து கொண்டாள். எனவே அந்த வாசனை வீசும் வீட்டை நோக்கி சென்று அந்த வீட்டின் ஜன்னல் மூலம் மெதுவாக உள்ளே எட்டிப்பார்த்தாள். தன்னுடைய அழகிய ரோஜா மலர்கள் ஒரு அழகான பூச்செண்டில் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டாள். அதன் அழகைப் பார்த்து இவளே பிரமித்துப் போனாள்.*

வேதாகமத்திலும் ஒரு ரோஜாவைப் பற்றி பார்க்கலாம். **“அது தான் ரோதை என்ற பெண்”.** இவளுடைய பெயரின் அர்த்தம்: **ரோஜா.** ரோதைக்கும் ரோஜா மலருக்கும் என்ன சம்பந்தம் என்று யோசிக்கிறாயா? றோசியின் ரோஜா மலர்கள் அழகாய் தோட்டத்தில் எல்லோரும் காணக்கூடியதாய் இருந்தது. ஆனால் வேதாகமத்தில் காணப்படுகிற ரோஜா (ரோதை) இவள் ஒரு வீட்டிற்குள் கதவுகள் பூட்டப்பட்ட நிலையில் யாருக்கும் தெரியாமல் இருக்கிறாள். **யாருடன் இருந்தாள் தெரியுமா? அனேகர் கூடி ஜெபம் பண்ணிக் கொண்டிருக்கும் இடத்தில் தான் அந்த ரோஜா (ரோதை) இருந்தாள். அப்போஸ்தலர் 12:12-13 (12.) அவன் இப்படி நிச்சயித்துக்கொண்டு, மாற்கு என்னும் பேர் கொண்ட யோவனுடைய தாயாகிய மரியாள் வீட்டுக்கு வந்தான்: அங்கே அநேகர் கூடி ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்கள். 13. பேதுரு வாசற்கதவைத் தட்டினபோது ரோதை என்னும் பேர்கொண்ட ஒரு பெண் ஒற்றுக்கேட்க வந்தாள்.**

யாருக்காய் ஊக்கமாய் ஜெபிக்கிறார்கள்? யாக்கோபு கொலை செய்யப்பட்டாயிற்று. இப்போது பேதுரு பிடிபட்டு சிறைச்சாலையிலே சங்கிலிகளினாலே கட்டப்பட்டு சேவகர் நடுவே நித்திரை பண்ணிக் கொண்டிருந்தான். காவற்காரரும் கதவுக்கு முன்னிருந்து, சிறைச்சாலையைக் காத்துக் கொண்டிருக்கும் போது தான், ரோதையும் சபையாரும் ஊக்கமாய் தேவனை நோக்கி ஜெபிக்கிறார்கள். ஜெபித்துக் கொண்டிருக்கும் போது, நடந்த அற்புதம் என்ன தெரியுமா?

கர்த்தருடைய தூதன் பேதுரு இருந்த அறைக்குள் பிரவேசிக்க வெளிச்சம் பிரகாசித்தது. தூதன் பேதுருவை விலாவிலே தட்டிய போது கட்டப்பட்ட சங்கிலிகள் கைகளிலிருந்து கழன்று விழுந்தது. அதுமட்டுமல்ல, தூதன்: *அரையைக் கட்டி பாதரட்சைகளைத் தொடுத்துக் கொள், வஸ்திரத்தைப் போர்த்துக் கொண்டு என் பின்னே வா* என்ற போது அவன் புறப்பட்டு தூதன் பின் சென்றான். போகும் பொழுது இரும்புக் கதவுகள் கூட அவர்களுக்காய் தானாய் திறவுண்டது. எப்படி இரும்புக் கதவுகள் திறந்தன? ரோதையும், சபையாரும் ஊக்கமாய் ஜெபிக்கிறார்கள். **அவர்களுடைய ஜெபத்தின் வல்லமை தான் மூடப்பட்ட இரும்புக் கதவுகளை பேதுருவுக்காய் திறக்கப்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பண்ணியது. அப்போஸ்தலர் 12:10 அவர்கள் முதலாங்காவலையும் இரண்டாங்காவலையும் கடந்து, நகரத்திற்குப்போகிற இருப்புக் கதவண்டையிலே வந்தபோது அது தானாய் அவர்களுக்குத் திறவுண்டது: அதின் வழியாய் அவர்கள் புறப்பட்டு ஒரு வீதி நெடுக நடந்து போனார்கள்: உடனே தூதன் அவனை விட்டுப் போய்விட்டான்.** கதவு திறக்கப்பட்ட பின் சரியான ஒரு பாதையில் தூதன் அவனை விட்டுப் போய்விட்டான்.

அப்போது தான் பேதுருவுக்கு தெளிவு வந்து, கர்த்தர் தம்முடைய தூதனை அனுப்பி ஏரோதின் கைக்கும், யூத ஜனங்களின் எண்ணங்களுக்கும் என்னை விடுதலையாக்கி விட்டார் என்ற நிச்சயத்துடன் தனக்காய் ஊக்கமாய் ஜெபிக்கிற ரோதையும், சபையாரும் இருக்கும் வீட்டின் கதவை தட்டிய போது ரோதை மெதுவாக ஒட்டுக்கேட்க வந்தாள். **ஏன் அவள் மட்டும் எழுந்து கதவு அருகில் வந்தாள் என்று சிந்திக்கிறாயா? அவளுக்கு தெரிந் திருக்கும் ஊக்கமான ஜெபத்திற்கு தான் தேவன் பதில் கொடுப்பார் என்று.** வந்தவள் கதவைக் திறக்காமல் உள்ளே ஓடிச்சென்று பேதுரு வாசலுக்கு முன் நிற்கிறார் என்று ஜெபித்துக் கொண்டிருக்கும் கூட்டத்திற்கு அறிவித்தாள். ஆனால் அவர்களோ ஜெபித்துக் கொண்டு தான் இருக்கிறார்கள். இவ்வளவு சீக்கிரத்தில் பதில் கிடைக்கும் என்று நம்பாமல் "நீ பிதற்றுகிறாய்" என்றார்கள். விட்டாளா ரோதை? அது பேதுரு தான் என்று உறுதியாய் சாதித்தாள். ஆனால் அவர்களோ தூதனாயிருக் கலாம் என்றார்கள். ஆனால் ரோதை சோர்ந்து போகவில்லை. மீண்டும் தட்டிய போது கதவை திறந்தார்கள். அங்கே பேதுருவைக் கண்டு பிரமித்தார்கள். **ரோதை ஜெபித்தாள், விசு வாசித்தாள், பலனைக் கண்டு கொண்டாள்.**

இச் சம்பவமானது, எமக்கும் ஒரு பிரமிப்பை உண்டுபண்ணுகிறதல்லவா? புதிய வருடத்தின் முதல் நாட்களில் வந்திருக்கும் நாம் எம்முடைய கடந்த வருடத்தின் ஜெப வாழ்க்கையை ஆராய்ந்து பார்ப்பது நல்லதல்லவா? ரோதை (ரோஜா) ஜெபிக்கிற கூட்டத்துடன் காணப்பட்டாள். **கடந்த ஆண்டு நீ அதிகமாய் காணப்பட்ட இடங்கள் எவை? உன்னுடைய நேரத்தை எப்படி செலவழித்தாய்? சற்று சிந்திப்பாயா?** இவ் வருடம் தேவன் உன்னை ஜெபிக் கின்ற கூட்டத்தில் தான் பார்க்க விரும்புகின்றார் என்பதை மறந்து போகாதே.

ரோதையும் சபையா ரும் ஊக்கமாய் ஜெபித்த போது தான் தேவதூதன் கிரியை செய்ய ஆரம்பித்தான். நீயும் இவ் வருடம் ஊக்கமாய் ஜெபிக்கின்ற கூட்டத்துடன் சேர்ந்து ஜெபிக்கும் போது தேவன் கிரியை செய்ய ஆரம் பிப்பார். அப்போது இருண்ட இடங்களில் வெளிச்சம் உண் டாகும், கட்டப்பட்ட சங்கிலிகள் விழுந்து போகும், அதுமட்டு மல்ல மூடப்பட்ட இரும்புக் கதவுகள் ஜெபத்தின் மூலம் திறக்கப்படும். அப்போது உன் வாழ்வில், குடும்ப வாழ்வில், சபையில், தேசத்தில் தேவன் கிரியை செய்வார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோசி தன்னுடைய தோட்டத்தின் மலர்கள் இன்னொருவருடைய பூச்செண்டில் அழகாய் இருப்பதை பார்த்து பிரமித்தது போல உன் ஊக்கமான ஜெபத்தின் மூலம் பதில்களை நீ காணும் போது நீயும் பிரமித்துப் போவாய்.

இவ் வருடம் தேவன் உனக்காக ஜெப வாசலை திறந்து வைத்திருக்கிறார் என்பதை மறந்து போகாதே. நீ ஊக்கமாய் ஜெபிக்க வேண்டும் என்பதை தேவன் விரும்புகிறார்.

**யாக்கோபு 5:16**
**நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்பெல னுள்ளதாயிருக்கிறது.**

# சரியான விடை எழுதியவர்கள்

## குறுக்கெழுத்துப் போட்டி — 76, வினா விடை — 78

**காரைநகர்**
01. நா.கிறிஸ்ரீன்
02. நா.சிவபாக்கியம்
03. நா.கிறிஸ்தீனா
04. பா.அனுசியா
05. பா.அனுகரன்

**பாண்டவெட்டை**
06. வ.அக்சாள்
07. வ.யோகனன்
08. வ.தயாழினி
09. வ.கெத்சியாள்
10. சி.ரதீஸ்வரி
11. செ.டிசேந்தன்
12. செ.நகுலா
13. செ.எமீமாள்
14. எஸ்.கயா •
15. சி.ஜெறோம் •
16. சி.றஜிந்தினி •
17. வி.ரெபெக்காள்
18. ம.சிவகௌரி •
19. ம.நிம்சிகா •


**ஊர்காவற்றுறை**
20. வி.நிதர்சன்
21. வி.நிதர்சனா
22. கே.றெஜிவன்
23. க.விக்கினேஸ்வரன்
24. வி.சர்மிளா
25. உ.டிரோன் *
26. து.கிருஷ்ணகுமார் *

**கோப்பாய்**
27. த.தர்சினி *

**அளவெட்டி**
28. கு.குயின்சி •
29. கு.நித்தியா •
30. தெபோறா •
31. செ.ஜென்சி •
32. ச.துவாரகா
33. கி.அர்ச்சனா •
34. சு.வினிதா •

**நவக்கிரி**
35. ச.சுதா •

• குறுக்கெழுத்துப்போட்டி மட்டும் சரியாய் எழுதியோர்
* வினாவிடை மட்டும் சரியாய் எழுதியோர்
இரண்டும் சரியாய் எழுதியோர்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org







இப் புதிய ஆண்டிலும் தமது கிருபையையும், நீதியையும் நமக்கும், நமது சந்ததிக்கும் வாக்களித்த கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தினால் அனலின் வாசக நெஞ்சங்கள் அனைவரிற்கும் அன்பான புத்தாண்டு நல் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன். கர்த்தர் தாமே உங்களையும், உங்கள் குடும்பங்களையும் தமது வல்லகரம் கொண்டு ஆசீர்வதிப்பாராக.

நம் ஒவ்வொருவரதும் வாழ்க்கை ஓட்டம் வித்தியாசமானது. எம்முடைய இந்த ஓட்டத்திலே சூழ்நிலைகள் மாறும், மனநிலைகள் மாறும். எம்முடைய வாழ்வில் துக்கம் இன்பமாகும்; இன்பம் துன்பமாகும். நாம் நினைத்ததும் நடக்கும் அது மாறாகவும் நடக்கும். நாம் விரும்பிய, எதிர்பார்த்த அனைத்துமே வித்தியாசமாக இருக்கலாம்.

மட்டுமல்ல, இந்த ஆண்டிலே நல்ல மாற்றங்கள் வருமா? என்ற எதிர்பார்ப்புகள் நமக்கு உண்டு. கஷ்டங்கள் நீங்குமா? என்ற ஏக்கங்கள் சிலரிற்கு உண்டு. நலமான காரியங்கள் நடக்க வேண்டும் என்ற ஆவல் பலருக்கு உண்டு. இந்த ஆண்டிற்காக பெரிய பெரிய திட்டங்களைக் கூட நாம் போட்டிருக்கலாம். நம்முடைய மனதிலே எதையெல்லாம் வைத்துப் பூட்டுகின்றோமோ அதற்கு ஏற்றவாறே நமது எதிர்பார்ப்புகள் இருக்கும்.

இந் நிலையில் தான் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகின்றார்: **மத்தேயு 10:31 ஆதலால், பயப்படாதிருங்கள்: அநேகம் அடைக்கலான் குருவிகளைப்பார்க்கிலும் நீங்கள் விசேஷித்தவர்களாயிருக்கிறீர்கள்.** தேவனுடைய உண்மையான பிள்ளைகள் தேவனிற்கு மிகவும் விலையேறப் பெற்றவர்கள். தேவன் எப்போதும் உங்களையும், உங்கள் சொந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


தேவைகளையும் மதிக்கின்றார். அவர் எப்போதும் எம்முடைய அன்பை யும், ஐக்கியத்தையும் அவர் எதிர்பார்க் கிறார். அதனால் தான் தேவன் தம்முடைய சொந்த குமாரனை எமக்காக சிலுவைக்கு ஒப்புக்கொடுத் தார். ஆகவே தான் நாம் அவரது பிரசன்னம், கரிசனை, பாதுகாப்பு போன்றவற்றிற்கு தூரமானவர்கள் அல்ல. ஏனெனில் எம்மை கண்காணிக் கும் தேவனே ஒரு போதும் எமக்கும் அவரிற்கும் இடையே உள்ள தொடர்பை இழப்பது இல்லை.

நீங்கள் தேவனிற்கு மிகவும் முக்கியமானவர்கள் தான். அவர் உங்களுடைய உண்மை அன்பு, கீழ்ப்படிதல் ஆகியவற்றை உலகத்தி லுள்ள அனைத்து காரியங்களையும் விட மேலாக மதிக்கிறார். எனவே கொடிய நெருக்கங்கள், **உபத்திரவங் களில் நாம் சிக்கி தவிக்கும் போது தேவன்என்நெருக்கத்தை அறிவாரா?** என்று கலங்குகின்றோம். எம்முடைய குடும்ப நிலை, தனிப்பட்ட வாழ்க்கை, எம்முடைய ஊழிய விடங்கள் எல்லாமே மனக்குழப்பத்தையும், வெறுப்பையுமே உண்டாக்குகின்றன.

**நீங்கள் தைரியமாய் இருங் கள், தேவன் நம் பேரில் ஆழ்ந்த கரிசனையோடு எல்லாவற்றையும் தன் கையினால் அடக்கி ஆழ்கி றார் என்று தேவனுடைய சத்திய வேதம் ஆணித்தரமாக கூறுகின் றது. எனவே மற்றவர்களிற்காக கவலைப்படும் தேவன் தம்முடைய பிள்ளைகளிற்காக கவலைப்படா மல் இருப்பாரோ?**

தேவன் எம்முடைய வழித் தடத்தைத் தொடர்வதில் அவர் தவறுவதேயில்லை. ஏனெனில் கர்த்தரு டைய கிருபை நம்மேலும், அவருடைய நீதி நமது பிள்ளைகள் மேலும் முடிவின்றி இருக்கும். ஆகவே தேவனிற்கு பயந்து வாழும் அந்த வாழ்க்கையை மாத்திரம் தெரிந்து கொண்டு, இப் புதிய ஆண்டை ஆரம் பிப்போம். **தேவன் சீயோனில் இருந்து நம்மை ஆசீர்வதிப்பாராக.**

## சரியான விடை எழுதியவர்களில்
## பரிசுக்குரியவர்களாக தெரிவு செய்யப்பட்டிருப்பவர்கள்:



**வினாவிடை - 78**

*க.விக்னேஸ்வரன்,*
*ஊர்காவற்றுறை*

**குறுக்கெழுத்துப் போட்டி - 76**

*ச.சுதா - நவக்கிரி*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பெற்றோரின் அல்லது உறவின் அடிப்படையிலான இருதயம் கொண்ட ஊழியம்

ஆண்டவர் தாயைப் போல தேற்றுகிறவர், தேவனுடைய நாமத்தைக் குறித்து சொல்கிற போது அவர் தாயின் மார்பையுடைய தேவன் என்று சொல்லப்படுகிறது. **யாத்திராகமம் 2:1-5 (1.) லேவியின் குடும்பத்தாரில் ஒருவன் லேவியின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம்பண்ணினான். 2. அந்த ஸ்திரீ கர்ப்பவதியாகி, ஒரு ஆண்பிள்ளையைப் பெற்று, அது அழகுள்ளது என்று கண்டு, அதை மூன்றுமாதம் ஒளித்துவைத்தாள். 3. அவள் அதை அப்புறம் ஒளித்து வைக்கக்கூடாமல், ஒரு நாணற்பெட்டியை எடுத்து, அதற்குப் பிசினும் கீலும் பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள். 4. அதற்கு என்ன சம்பவிக்கும் என்பதை அறியும்படி அதின் தமக்கை தூரத்திலே நின்றுகொண்டிருந்தாள். 5. அப்பொழுது பார்வோனுடைய குமாரத்தி நதியில் ஸ்நானம்பண்ண வந்தாள்: அவளுடைய தாதிகள் நதியோரத்தில் உலாவினார்கள்: அவள் நாணலுக்குள்ளே இருக்கிற பெட்டியைக் கண்டு, தன் தாதியை அனுப்பி அதைக் கொண்டுவரும்படி செய்தாள்.** பார்வோனின் கட்டளை இஸ்ரவேல் மக்களுக்கு பிறக்கிற ஆண் குழந்தைகள் அனைத்தும் அழிக்கப்பட வேண்டும். ஆகவே அதினிமித்தமாக பிறக்கும் ஆண் பிள்ளைகளை நைல் நதியில் போடும்படியாக கட்டளை கொடுக்கப்பட்டிருந்தது.

ஒரு தாய் தான் குழந்தை பெற்றவுடன் அக் குழந்தை அழகுள்ளது என்று கண்டு மூன்று மாதம் அதை ஒளித்து வைத்தாள். தாங்கள் பெற்ற பிள்ளையை தாங்களே கொலை செய்வது என்பது எந்த பெற்றோராலும் முடியாது. ஆகவே இந்த தாய் எவ்வளவு முயற்சி எடுத்து காப்பாற்ற முடியுமோ அவ்வளவுக்கு ஒரு முயற்சியை அந்தத் தாய் எடுக்கிறாள். தன்னுடைய பிள்ளைக்குரிய கடைசி பாதுகாப்புக்குரிய முயற்சியையும் எடுத்து இறுதியில் நைல் நதியிலே வைக்கிறாள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந் நாட்களில் ஊழியர்களாகிய எமக்கு பெற்றோரின் இருதயம் இருக்க வேண்டும். உங்களுக்கு கீழாக ஒருவரோ அல்லது இருவரோ அல்லது அதற்கு மேலதிகமானவர்கள் இருந்தால் நிச்சயமாக அப்படிப்பட்ட ஊழியருக்கு பெற்றோருடைய இருதயம் இருக்க வேண்டும். இந்த இருதயம் இல்லாவிட்டால் நாங்கள் தேவனுடைய பொறுப்புக்களை அல்லது கர்த்தர் எங்களுக்கு கொடுத்திருக்கிற ஆத்துமாக்களை குறித்த சரியான கரிசனை, உண்மையாக அவர்களை பராமரிக்க வேண்டும் என்ற தாகம், ஏக்கம் எமக்கு ஒரு போதும் வராது. மாறாக பெற்றோருக்குரிய இருதயம் எமக்கு இருக்குமாயிருந்தால் எங்களுக்கு கீழாய் ஆண்டவர் தந்த ஒவ்வொரு ஆத்துமாவை குறித்த கரிசனையையும் நிச்சயமாய் நாங்கள் கொண்டிருப்போம்.

ஊழியத்திலே ஆத்துமாவின் நன்மைக்காக, தேவ சித்தம் நிறைவேற வேண்டும் என்ற பெரிய நோக்கத்திற்காக நாங்கள் கடைசி வரைக்கும் செயலாற்ற வேண்டும். முடிந்தளவு ஆண்டவரின் நாமத்தின் மகிமைக்காக, தேவ ராச்சியத்தின் வளர்ச்சிக்காக அல்லது ஆத்தும மீட்பிற்காக, ஆத்துமாக்கள் காக்கப்படும்படியாக முழு முயற்சிகளை நாங்கள் செய்ய வேண்டும். அந்த முயற்சிகளை ஊழியர்கள் ஒவ்வொருவரும் செய்ய வேண்டும். அந்த முயற்சிகளில் சில தான்: "நாணற்பெட்டியை எடுத்து அதற்கு பிசினும் கீலும் பூசி பிள்ளையை வளர்த்தி" என்பதாகும். நைல் நதியில் போடுவது அரசின் கட்டளை. எனவே அந்த குழந்தையை உடனடியாகவே நதியில் போட்டிருக்கலாம். ஆனால் தான் பெற்ற பிள்ளையை குறித்த சரியான கரிசனை இந்த தாயிடம் காணப்பட்டது.

லேவியின் குடும்பத்தாரில் ஒருவன் லேவியின் குமாரத்திகளில் ஒருத்தியை விவாகம் பண்ணினான் என்று வசனம் ஆரம்பிக்கிறது. தாயைக் குறித்தும் தமக்கையை குறித்தும் சொல்லப்படுகிறது. அதாவது, தாயும் தமக்கையும் இணைந்த ஒரு ஊழியம் என்று கருதலாம். ஒரு ஆத்துமா காப்பாற்றப்படவேண்டும் என்பதற்காக இணைந்த ஒரு ஊழியம். பல வேளைகளில் நாங்கள் தனியாக முயற்சி செய்வோம், அது நல்லது தான். ஆனாலும் எங்களுடைய குடும்பம் என்று வருகிற போது குடும்பமாய் இணைந்து தேவராச்சிய பணியில் ஈடுபடுவது சிறப்பான காரியம் என்பதை புரிந்து கொள்ள வேண்டும்.

இங்கே தமக்கைக்கு என்ன வேலை என்றால்: பிள்ளைக்கு என்ன நடைபெறுகிறது என்பதை பார்த்துக் கொண்டு நிற்பது. நாங்கள் ஒரு காரியத்தை யோசிக்க வேண்டும். பார்வைகள் பலவிதத்தில் இருக்கிறது. சிலர் ஒருவரை விழுத்துவதற்காய் பார்ப்பார்கள், இன்னும் சிலர் ஒருவரை உயர்த்துவதற்காக பார்ப்பார்கள். நன்மை செய்வதற்காய் பார்ப்பார்கள், இல்லாத குற்றம் பிடிப்பதற்காய் பார்ப்பார்கள். சில விஷயத்தில் பார்த்தவர்களின் கண்களுக்குள் விழுந்த அனுபவப்பட்டிருக்கிறேன். சிலர் விழுத்த வேண்டும் என்பதற்கே பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஆனால் இந்த தமக்கையின் பார்வை என்னவென்றால்;


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னுடைய சகோதரனுக்கு என்ன நடக்கிறது, தன்னுடைய சகோதரன் வாழ வேண்டும், அவனுக்கு ஜீவன் கிடைக்க வேண்டும், அவன் எப்படியும் காப்பாற்றப் பட வேண்டும் என்று கண்ணும் கருத்துமாய் தன்னுடைய சகோதரனை பார்த்துக் கொண்டிருந்தாள். ஆண்டவர் எமக்குத் தந்த ஆத்துமாக்கள் தேவ ராச்சியத்திற்குள் நாம் பெற்றெடுத்த (விசுவாசிகள்) பிள்ளைகளைக் குறித்த சரியான பார்வை எங்களுக்கு இருக்க வேண்டும். எப்படி இவர்களைக் காப்பாற்ற முடியும்? எப்படி உதவி செய்ய முடியும், இந்த ஜீவனுக்கு நன்மை உண்டாக எப்படி காரியத்தை செய்ய முடியும் என்பதாகவே எங்களுடைய நோக்கங்கள் எல்லாம் நன்மை நிறைந்ததாக, சரியானதாக, நேர்மையானதாக, நீதியானதாக இருக்க வேண்டும்.

இங்கே தாய் ஒருவிதத்தில் ஊழியம் செய்தாள்: சகோதரி இன்னொரு விதத்தில் ஊழியம் செய்தாள். இரண்டும் ஒன்று தான் - தேவனுடைய சித்தம் நிறைவேறுவதற்கான செயலில் இருவரும் இருந்தார்கள். மோசே எகிப்திலே இருந்து மக்களை கொண்டு வர வேண்டும் என்ற பெரிய சித்தத்தை உடைக்காதபடி இந்த தாயும் தமக்கையும் இணைந்து செய்தது ஒரு சிறிய ஊழியம். அற்பமான ஆரம்பம் பெரியதொரு மோசே வரப்போகிறான். நதியிலே போட வேண்டும் எல்லோருக்கும் ஒரே கட்டளை தான். ஆனால் தாயும் சகோதரியும் தாங்கள் நதியில் போட்ட பிள்ளை அப்படியே போகட்டும் என்று விடவில்லை. கண்ணும் கருத்துமாய் கவனிக்கிற சகோதரி அப்படியே பிள்ளையைப் பார்த்துக் கொண்டிருந்தாள். ஒரு வேளை நாம் நேர்மையாய் செய்வதை, ஆண்டவருக்காக செய்வதை, சரியாக பார்ப்பதை இன்னொருவர் தவறாக புரிந்து கொண்டாலும் பரவாயில்லை. ஆனால் உங்களுடைய நீதியிலும் நேர்மையிலும் மற்றவர்களை உயர்த்த வேண்டும் என்ற பார்வையிலிருந்தும் ஒரு போதும் நீங்களும் நானும் தவறக்கூடாது.

**யாத்திராகமம் 2:3 அவள் அதை அப்புறம் ஒளித்துவைக்கக்கூடாமல், ஒரு நாணற்பெட்டியை எடுத்து, அதற்குப் பிசினும் கீலும் பூசி, அதிலே பிள்ளையை வளர்த்தி, நதியோரமாய் நாணலுக்குள்ளே வைத்தாள்.** அங்கே இளவரசியும் அவளுடைய தாதிமாரும் நிற்கிறார்கள். என்ன நடைபெறப் போகிறது என்று சரியான பார்வையோடும், காது கொடுத்துக் கொண்டும் அந்த தமக்கை நின்று கொண்டிருந்தாள். அவர்களுக்கு சரியாய் காது கொடுக்க வேண்டும். என்ன நடக்கிறது என்ற சரியான ஏக்கம் எங்களுக்கு இருக்க வேண்டும். "பார்த்தலும் - கேட்டலும் சிறப்பான ஒன்று" இன்னொரு ஆத்துமாவின் நன்மைக்காக இதனை அடிக்கடி பயன்படுத்த வேண்டும். இந் நாட்களில் ஆத்துமாவின் கதறல்கள் எங்களுக்கு கேட்பது குறைவாக இருக்கிறது. ஆனால் ஆத்துமாவின் கதறல் எங்களுக்கு கேட்க வேண்டும். பார்வோனின் குமாரத்தி நதியிலிருந்து நாணல் பெட்டியை எடுத்து திறந்த போது குழந்தை அழுதது. அப்படியென்றால் நாணல் பெட்டிக்குள் இருந்து குழந்தை அழுது கொண்டிருந்தது. இந்த சத்தம் அந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமக்கைக்கு வேதனையை ஏற்படுத்தியது. தன்னுடைய தம்பி அழுகிறானே, துடித்துக் கொண்டிருக்கிறானே என்று வேதனைப்பட்டிருப்பாள்.

உண்மையில் எத்தனையோ ஆத்துமாக்களின் நிலை அது தான். அநேக வேளைகளில் புதிதாய் வந்தவர்கள் கூட இப்படிப்பட்ட அனுபவங்களுக்கூடாக சென்றிருக்கலாம். என்ன நடக்கிறது என்று பார்க்க வேண்டும், இன்றைக்கு அதெல்லாம் சரியாக குறைந்துவிட்டது. கதறுகிறவர்களுக்காக ஜெபித்து, ஏன் கதறுகிறார்கள் என்பதை கேட்கும்படியாக காது கொடுப்பதெல்லாம் எனக்கும் உங்களுக்கும் நிச்சயமாய் இருக்க வேண்டும். சாதாரண ஊழியம் போன்று தமக்கையின் ஊழியம் தெரியும் ஆனால் அதற்குள் பொதிந்திருக்கிற நன்மையே மிகப் பெரிய தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றக்கூடிய தன்மை. போதகர் டி.எல். மூடியைக் குறித்து கேள்விப்பட்டிருப்பீர்கள்: அவர் எத்தனையோ இலட்சக்கணக்கான மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவித்திருக்கிறார். ஆனால் அவருக்கு ஆண்டவருடைய அன்பைக் குறித்து சொன்னது யார்? என்பது எமக்கு தெரியாமல் இருக்கிறது, அவருடைய பெயரே பலருக்குத் தெரியாது. அதே போன்று இந்த தமக்கையின் நிலையும் காணப்படுகிறது. ஒரு மோசேக்காக அவள் கவனமாக் பார்த்தாள். அந்த மோசே ஒரு பெரிய தீர்க்கதரிசியானான்.

எங்களுடைய ஊழியத்தின் பகுதி சிறிய பகுதியாக இருந்தாலும், அதை சரியாக செய்தால் அதனால் தேவனுக்கு பெரிய அறுவடை இருக்கும். இது ஒரு காரியமா? இது ஊழியமா? என்று கூட சிந்திக்கலாம். ஆனால் ஒரு போதும் மோசேயின் அக்காவை மறக்க வேண்டாம். அவளுடைய ஊழியமே பார்த்துக் கொண்டே நிற்பது தான். எங்களுடைய வாழ்க்கையில் சிலதை ஏனோ தானோ என்று நினைப்போதும். இதுவும் ஊழியமா? என்று நினைப்போம். இதைவிட நான் சும்மா இருந்திருக்கலாம் என்று யோசிப்போம். சிலர் ஆண்டவருக்காக பதினாயிரம் அடி எடுத்து வைத்தது போன்று இருக்கலாம். ஆனால் நான் ஆண்டவருக்காக ஒரு அடி தானே எடுத்து வைத்திருக்கிறேன் என்று யோசிக்கலாம். நீங்கள் எடுத்து வைத்திருக்கிற அந்த ஒரு அடி தான் கர்த்தர் எத்தனையோ பதினாயிரம் அடிகள் எடுத்து வைக்கிற ஊழியர்களை உருவாக்குகிற ஊழியம் என்பதை மறந்து போகாதீர்கள். என்னால் இதைவிட பெரிதாக ஒன்றும் செய்ய முடியவில்லை என்று யோசிக்கலாம், ஆனால் ஆண்டவருக்குள் சரியான உறுதியோடு செய்தால் மோசேயின் தமக்கையைப் போன்று, ரோதையைப் போன்று சரியானதை செய்தால் நல்ல செய்தியை அறிவீர்கள்.

தொடரும்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன்!




ஜசிந்தா அக்கா

கொக், கொக், கொக் என்று தாய்க் கோழி தனது குஞ்சுகளை கூட்டிக்கொண்டு இரை தேட ஒரு தோட்டத்திற்குள் சென்றது. குஞ்சுகளும் கீச்.. கீச்.. கீச்.. என்று தோட்டத்திற்குள் சென்றன. தோட்டச் சொந்தக்காரன் கோழியையும், குஞ்சுகளையும் தோட்டத்தைவிட்டு துரத்திவிட்டான். தாய் கோழி சோர்ந்து போகவில்லை. தன் குஞ்சுகளுக்கு உணவு கொடுக்க வேண்டும் என்று குஞ்சுகளைக் கூட்டிக்கொண்டு ஒரு மரத்தடிக்கு வந்தது. அந்த இடத்திலிருந்த மண் குப்பைகளைக் கிளறி குஞ்சுகளுக்கு உணவு கொடுத்தது. குஞ்சுகளும் மிகவும் சந்தோஷமாக அம்மா தங்களுக்கு கொடுத்த உணவை சாப்பிட்டன. ஆனால் ஒரு குஞ்சு மாத்திரம் அம்மாவைவிட்டு தனிமையாகவும் தூரமாகவும் நின்று தானே தனக்கு இரை தேடி சாப்பிட்டுக் கொண்டிருந்தது. தாய் கோழி உணவை வைத்துக் கொண்டு கொத்திக் கொத்தி குஞ்சை அழைத்தது. அந்த மிடுக்கான குஞ்சு தாயைத் திரும்பிப் பார்க்கவுமில்லை, தாய் உள்ளத்தை புரிந்து கொள்ளவுமில்லை. மேலே வானத்திலே பருந்து ஒன்று சத்தமிட்டு வட்டமிட்டுக் கொண்டிருந்தது. தன் கூர்மையான கண்களால் அம்மாவையும் குஞ்சுகளையும் நன்றாகக் கவனித்தது. தனிமையாய் சந்தோஷத்தோடே சாப்பிட்டுக் கொண்டிருந்த குஞ்சையும் உற்றுக் கவனித்தது. இன்றைக்கு எனக்கு நல்லதொரு சாப்பாடு என்று நினைத்து வானத்தில் வட்டமிட்டவண்ணம் தனிமையாய் நின்ற குஞ்சைப் பிடிப்பதற்குத் தன்னை ஆயத்தப்படுத்திக் கொண்டிருந்தது. இந்தத்


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

*தந்திரமான ஆயத்தம் குஞ்சுகளுக்குத் தெரியாதிருந்தது. இதைக் கவனித்த அம்மாக் கோழி மிகவும் பலத்த சத்தமாய் கொ...க் என்று சத்தமிட்டு எச்சரித்தது. உடனே பக்கத்திலிருந்த குஞ்சுகள் எல்லாம் அம்மாவுடைய செட்டைக்குள் ஓடி வந்து மறைந்து கொண்டன. பாதுகாப்பாகவும், பயமில்லாமலும் இருந்து கொண்டன.*

*ஆனால் அம்மாவை அலட்சியம் பண்ணி என்னால் எல்லாம் முடியும் என்ற அகங்காரத்தோடு இருந்த குஞ்சை பருந்து மிக வேகமாக வந்து தனது கூரிய நகங்களால் குத்திப் பிடித்துக் கொண்டு உயர உயர மேலே பறந்து சென்றது. பருந்தின் நகங்கள் குத்தக் குத்த வேதனையால் குஞ்சு கீயாக்.. கீயாக்.. என்று கத்தி துடியாய் துடித்தது. குஞ்சுக்கு உதவி செய்ய யாரும் இருக்கவில்லை. யார் என்னை விடுதலையாக்குவான் என்று ஏங்கியது. 'ஐயோ நான் என் அம்மாவை அலட்சியம் பண்ணியதால் பருந்தின் வயிற்றிற்கு இரையாகிறேனே' என்று எண்ணி எண்ணி மடிந்தது.*

பிரியமான சின்ன தம்பி தங்கைகளே இக் கதையை வாசித்துக் கொண்டிருக்கும் போதே நீங்களும் உங்கள் அம்மாவை அலட்சியம் பண்ணினீர்களா? இல்லையா? என்று நினைக்கிறீர்கள் அல்லவா? அப்படி இருந்தால் ***"இயேசு சுவாமி என்னைத் தயவாய் மன்னியும்"*** என்று கேளுங்கள். பிள்ளைகளே, அம்மாவின் உதவி உங்களுக்கு வேண்டும். உங்களால் தனித்து எதையும் செய்ய முடியாது. **ஆகவே அம்மாவை அசட்டை பண்ணாதே, அம்மாவை ஏசாதே, அம்மாவை அடிக்காதே. இவைகளுக்கு நீ விலகியிருந்து, "உன் தாயின் போதகத்தை தள்ளாதே – நீதிமொழிகள் 1:8"** என்ற வார்த்தையின் படி நடவுங்கள்.

இயேசு சுவாமியும் சிறு பிள்ளையாய் இருந்த பொழுது பெற்றோருக்கு கீழ்ப்படிந்திருந்தார். பெற்றோருக்கு உதவிகள் செய்து கொடுத்தார். **"இயேசுவானவர்.. தேவ கிருபையிலும், மனுஷர் தயவிலும், அதிகமதிகமாய் விருத்தியடைந்தார் - லூக்கா 2:52"** என்று வேதாகமத்திலே எழுதப்பட்டிருக் கிறது. பார்த்தீர்களா பிள்ளைகளே? உங்களது அம்மா, அப்பாவின் தயவு உங்களுக்கு வேண்டும். அதுமட்டுமல்ல; **வயதில் முதிர்ந்தவர்கள், இயேசுவின் ஊழியர்கள், ஞாயிறு பாடசாலை ஆசிரியர்கள், நீங்கள் படிக்கும் பாடசாலை ஆசிரியர்கள், இன்னும் பல மனிதர்களின் தயவு உங்களுக்கு வேண்டும்.** ஆகவே இயேசு சுவாமியைப் போல நீங்களும் பெற்றோரை அசட்டை பண்ணாமல் அவரைப் போல கீழ்ப்படிந்திருங்கள். அப்பொழுது தேவ கிருபையிலும் மனித தயவிலும் வளர்ந்து வருவீர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் "... **தாயின் கட்டளையை அசட்டை பண்ணுகிற கண்ணை நதியின் காகங்கள் பிடுங்கும், கழுகின் குஞ்சுகள் தின்னும் - நீதிமொழிகள் 30:17"** என்று வேதாகமத்தில் எழுதப்பட்டிருக்கிறது. இயேசு சுவாமி விரும்புகிறது போல் நடந்தால் இயேசப்பாவின் செட்டைக்குள் பாதுகாப்பாயிருப்பீர்கள். வேத வசனம் என்ன சொல்கிறது தெரியுமா? **"உன்னதமானவரின் மறைவில் இருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்" - சங்கீதம் 91:11.**

ஆனால் இயேசு இல்லாத தனிமையான வாழ்க்கை எவ்வாறு கோழிக்குஞ்சு பருந்துக்கு இரையாகிற்றோ அவ்வாறு உங்களையும் பிசாசு பிடிக்க முடியும். அதன் பின்பு கெட்ட காரியங்களைச் செய்ய வைப்பான். பொல்லாத பிள்ளையாய் மாற்றிவிடுவான். உங்களுக்குத் துக்கத்தையும், வேதனையையும் கொடுப்பான். பிசாசினிடத்தில் உங்களுக்கு பாதுகாப்பும் இல்லை. ஆகவே பிரியமான பிள்ளைகளே அம்மாவின் எச்சரிப்பு சத்தத்தைக் கவனித்து நடப்பேன் என்று மனதில் நினைத்து இயேசுவோடு நடவுங்கள். இயேசு சுவாமியே உங்களைப் பாதுகாப்பார்.

**பிள்ளையானாலும், அதின் செய்கை சுத்தமோ செம்மையோ என்பது, அதின் நடக்கையினால் விளங்கும். சங்கீதம் 20:11**

## வினாவிடை - 78
### *சரியான பதில்கள்*




01. தெயுதாஸ் - அப்போஸ்தலர் 5:36
02. அப்போஸ்தலனாகிய பவுல் - அப்போஸ்தலர் 27:34
03. சாலொமோன் - பிரசங்கி 12:12
04. ஒபில் - 1நாளாகமம் 27:30
05. அகஸ்துராயன் - லூக்கா 2:1
06. சிம்சோன் விவாகம் செய்த பெலிஸ்திய ஸ்திரீயின் தங்கை - நியா 15:1-2
07. தாவீது - 11சாமுவேல் 14:11
08. தாவீது - 11சாமுவேல் 15:16
09. எகெதியா - 1நாளாகமம் 27:30
10. யோவாஸ் ராஜா - 11இராஜா 12:7


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ஜேம்ஸ் ஹன்னிங்டன்
## 1847 - 1885



### உடல் அழிந்தாலும்

ஆப்பிரிக்க நாட்டில் உகாண்டா என்ற இடத்தை முட்டிசா என்ற சிற்றரசன் ஆண்டு வந்தான். இவன் காலத்தில் கிறிஸ்தவ மிஷனெரிகளை தன் நாட்டிற்குள் அனுமதித்து மக்களுக்கு நற்போதகத்தைக் கொடுக்க அவர்களை உற்சாகப்படுத்தினான். அவனும் இயேசு கிறிஸ்துவை ஏற்றுக் கொண்டு, வாழ்ந்து வந்தான். ஆனால் அவனுடைய காலம் அதிக நாள் செல்லவில்லை. 1884ஆம் ஆண்டு அவன் மரித்துப் போனான்.

அவன் மகன் முவாங்கா ஆட்சி பொறுப்பேற்றான். இவன் கொடூர முரடன். கிறிஸ்தவர்களைக் கண்டாலே இவனுக்குப் பிடிக்காது. அவர்களை வெறுத்தும், நாட்டை விட்டும் வெளியே துரத்தினான்.

1847ஆம் ஆண்டு பிறந்த ஜேம்ஸ் ஹன்னிங்டன் இங்கிலாந்து நாட்டில் உள்ள மிஷனெரி சங்கத்தின் உதவியுடன், 1884ஆம் ஆண்டு உகாண்டாவை நோக்கிப் புறப்பட்டார். உகாண்டாவில் 1870 ஆம் ஆண்டு துவக்கத்திலிருந்தே மிஷனெரிப் பணிகள் ஆரம்பமானது. ஆயினும் இடையில் ஏற்பட்ட தடங்கலினால் அது நிறுத்தி வைக்கப்பட்டது.

ஜேம்ஸ் ஹன்னிங்டன் மாபெரும் தரிசனத்துடனும், மிகுந்த வாஞ்சையுடனும், கிறிஸ்துவின் அன்பில் அம் மக்களை வளரச் செய்யவும், இறை ராஜ்யத்தை அங்கு விரிவுபடுத்தவும், ஒரு குழுவோடு அங்கு சென்றார். எவ்வளவு அதிக ஆர்வத்தோடு அங்கு சென்றாரோ அதே வேகத்தில் எதிர்ப்புகள் அங்கிருந்து கிளம்பின.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1885ஆம் ஆண்டு, அக்டோபர் 25ஆம் நாள் இவர்கள் அனைவரும் அம் மக்களால் பிடிக்கப்பட்டனர். ஒவ்வொருவரும் ஒவ்வொருவிதமாக சித்திரவதை செய்யப்பட்டனர். ஜேம்ஸ் ஹன்னிங்டனை அவர்கள் சிறைப்பிடித்து, ஏளனமாக பல கேலி விளையாட்டுக்குள் உட்படுத்தி, சிறிது சிறிதாக அவர்களை சித்திரவதை செய்தனர். அவர் கால் எலும்புகள் உடைக்கப்பட்டன. உடல்களில் உள்ள சதைகள் பிய்ந்து போகும்படி அடிக்கப்பட்டார். ஆயினும், இயேசு கிறிஸ்துவின் மேல் உள்ள பற்றுதலினால் தன்னை அடித்தவர்களுக்கும் நற்செய்தி அறிவித்தார். இறுதியில், இரத்தம் அனைத்தும் மண்ணில் சிந்த, அம் மண்ணில் கோதுமை மணியாகச் சரிந்தார்.

**அன்பரே! இயேசுவைப் பற்றி அறியாத மக்களுக்கு சுவிசேஷத்தை அறிவிப்பீர்களா?**

**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: உங்கள் அரசரிடம் போய் கூறுங்கள், நான் உகாண்டாவின் பாதைகளை என் இரத்தத்தால் வாங்கிவிட்டேன் — ஜேம்ஸ் ஹன்னிங்டன்.**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" அக்டோபர் 29**

## மட்சுக்கோ

\-

# நம்மைத் தெரிந்தெடுக்கும் தேவன்



சிறுவயதிலேயே தன்னை கிறிஸ்துவுக்கு ஒப்புக்கொடுத்து வாழ்ந்து வந்தார் மட்சுக்கோ. இவர் பெரியவரான போது, கிறிஸ்துவை அறியா ஒரு அரசாங்க அலுவலருக்கு திருமணம் செய்து வைக்கப் பட்டார். 3 பெண் குழந்தைகள் இவருக்குப் பிறந்தனர். அச் சமயம் ஏற்பட்ட யுத்தத்தில் இவரின் கணவர் இறந்து போனார். 3 குழந்தைகளையும் காப்பாற்றுவதில் மிகவும் கஷ்டப்பட்டார் மட்சுக்கோ.

தான் வசித்த ஊரில் வேலையில்லாதபடியால் ஹிரோஷிமா என்ற நகருக்கு புறப்பட்டார். ரயிலில் பிரயாணம் செய்யும் போது அவருக்கு ஒரு யோசனை வந்தது. சமீபத்தில் வரும் பெரிய ஆற்றில் தன் பிள்ளைகளை தூக்கி எறிந்துவிட்டு தானும் தற்கொலை செய்து கொள்ள வேண்டும் என்று நினைத்தார். அச் சமயம் ஆண்டவர் அவரோடு பேசினார். தன் தற்கொலை எண்ணத்தை நினைத்து வருந்தி மனந்திரும்பினார்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


ஹிரோஷிமா நகரில், ஒரு வைத்தியசாலையில் இவருக்கு வேலை கிடைத்தது. தன் திறமையை முழுவதும் உபயோகித்ததால் சமையல் அதிகாரியாக உயர்த்தப்பட்டார். 1945ஆம் ஆண்டு, ஒரு நாள் அவ் வேலையை விட்டுவிட்டு ஹிரோஷிமா நகரத்திலிருந்து அருகிலிருக்கும் மலைக்குப் போகும்படி ஆண்டவர் அவரோடு பேசினார். எனவே தன் பணியை ராஜினாமா செய்தார். ஆயினும் மேலதிகாரிகள், சம்பளத்தை உயர்த்தி தருவதாக கூறியும், இவர் அதனை ஏற்றுக்கொள்ளாமல் ஆண்டவரின் கட்டளைக்கு கீழ்ப்படிந்தார்.

அடுத்து நாள் 1945ஆம் வருடம், ஆகஸ்டு 6ஆம் திகதி, ஹிரோஷிமா நகரத்தின் மீது அமெரிக்கா குண்டு வீசியது. அந்த நகரம் முழுவதும் அழிந்தது. ஆண்டவர் தன் வாழ்வில் வைத்திருந்த நோக்கத்தை அப்பொழுதே உணர ஆரம்பித்தார் மட்சுக்கோ அம்மையார். தன் குழந்தைகளுக்கு வேத சாஸ்திரங் களை கற்றுக்கொடுத்து, அவர்களை சிறந்த மிஷனெரிகளாக மாற்றினார். ஒருவர் ஜமைக்காகவுக்கும், இன்னொருவர் ஆப்பிரிக்காவுக்கும், மற்றொருவர் இந்தியாவுக்கும் குடும்பமாக தங்கள் மிஷனெரிப் பயணங்களைத் தொடங்கினார் கள். இவ்வம்மையாரை பயன்படுத்தின தேவன் உங்களையும் பயன்படுத்தக் கூடுமல்லவா?

**அன்பரே! உங்கள் குழந்தைகளை கிறிஸ்துவின் பணிக்கு அர்ப்பணிக்கிறீர்களா?**


**வாழ்விலிருந்து வாழ்வுக்கு: கர்த்தரை நம்புகிறவர்கள் என்றென்றைக்கும் அசையாமல் நிலைத்திருக்கும் சீயோன் பர்வதத்தைப் போல் இருப்பார்கள்.**

**நன்றி: "மனிதர்களைத் தேடிய மாமனிதர்கள்" செப்டம்பர் 25**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வினா விடை - 79

*01.* மதுரமும் நற்கனியுமுடைய மரம் எது?

*02.* கர்த்தருடைய ஜனங்களை அகந்தையாய் நடத்தினவன் யார்?

*03.* "போஜனசாலைக்குள் அழைக்கப்பட்டவர்கள்" யார்?

*04.* யாருடைய வழி ராஜ பாதையாயிருக்கிறது?

*05.* "சாரத்தினால் நிறைந்திருக்கும் மரம்" எது?

*06.* கர்த்தர் எந்த ஸ்திரீயின் கண்களைத் திறந்தார்?


*07.* சகலவகை கனி விருட்சங்களையும் நாட்டின ராஜா யார்?

*08.* "நீர் என் பாதையை அறிந்திருக்கிறீர்" என்றவன் யார்?

*09.* "நான் ஒன்று செய்வேன்" என்றவன் யார்?

*10.* "தெருக்களிலே விளையாடுகிற ஆண் பிள்ளைகளையும் பெண் பிள்ளைகளையும்" குறித்து வாசிப்பது எங்கே?

---



# குறுக்கெழுத்துப் போட்டி - 76

## சரியான பதில்கள்

**இடமிருந்து வலமாக**

03. செயல்தியேல் (எஸ்றா 3:2)
05. லேவியர் (எண் 18:23)
06. சவுல் (1சாமு 28:20)
08. கிதியோன் (நியா 8:17)
12. அமத்சியாவின் (11நாளா 25:19)

**வலமிருந்து இடமாக**

01. யோனத்தானின் (1சாமு 14:27)
04. தரியுராஜா (தானி 6:20)
07. பெனாயா (குழம்பியுள்ளது) (1நாளா 11:22)
10. எலெயாசார் (11சாமு 23:10)

**மேலிருந்து கீழாக**

02. நெத்தோபாத்தியன் (11நாளா 27:18)

**கீழிருந்து மேலாக**

08. கிருபை (சங்கீ 108:4)
09. பிலேயாம் (எண் 23:10)
11. சாலொமோன் (11சாமு 12:25)
12. அர்சாவின் வீட்டில் (1இரா 16:9)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 77

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | ○ | ○ | 02 | | | | | ○ |
| 05 | | | | | ○ | 04 | 03 | |
| | ○ | | | | | 06 | | |
| | | | 07 | ○ | | | | |
| | ○ | 08 | | ○ | 09 | | | |
| | | ○ | | 10 | ○ | | | |
| | 11 | | | | | ○ | ○ | |
| | 13 | ○ | ○ | | | | | 12 |
| ○ | | | | | 14 | ○ | ○ | 15 |

குறிப்பு:- 12வயதுக்கு மேற்பட்டவர்களே தயவு செய்து குறுக்கெழுத்துப் போட்டியை செய்து அனுப்பும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

- நன்றி -

## இடமிருந்து வலமாக

02. இவன் உக்கிரத்தோடே திராட்சை இரசப் பந்தியை விட்டெழுந்து அரமனைத் தோட்டத்திற்கு போனான்
05. இவனின் மறுபெயர் யெருபாகால்
08. பெசலெயேலின் அப்பா
11. கர்த்தாவே, நீர் நீதிமானை ஆசீர்வதித்து........ என்னும் கேடகத்தினால் அவனைச் சூழ்ந்து கொள்வீர்

## வலமிருந்து இடமாக

06. யாக்கோபு தேவனுடைய சேனையைக் கண்ட ஸ்தலத்திற்கு இவ்வாறு பெயரிட்டான்
07. இவன் கர்த்தருக்கு முன்பாக பலத்த வேட்டைக்காரனாயிருந்தான்
10. ஆசா அரசாண்ட 36ஆம் வருடத்தில் யூதாவுக்கு விரோதமாக வந்தவன்
12. யோவாபின் மேல் விழும்படி பெனாயா இவனால் கட்டளை பெற்றான்
14. கர்த்தர் லேவியின் கோலின் மீது இவனுடைய பெயரை எழுதச் சொன்னார்


## மேலிருந்து கீழாக

01. பெக்காவின் நாட்களில் குடிகளைச் சிறையாகக் கொண்டு போனவன்
03. இவன் 05 வயதாயிருக்கும் போது யோனத்தான் மரித்தான்
04. எப்பிராயீம் மலைத் தேசத்தில் உள்ள சோப்பீம் ஊரின் இன்னொரு பெயர்

## கீழிருந்து மேலாக

09. "மரணத்தின் கசப்பு அற்றுப்போனது நிச்சயம்" எனக் கூறிய ராஜா
13. தாவீதுக்கு தயவு செய்த ராஜா
15. ஒத்னியேலின் கை இவன் மேல் பலங்கொண்டது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





அன்பின் அனல் வாசகர்களே!

இப் புதிய ஆண்டில் உங்கள் சந்தாக்களை புதுப்பித்து சிரமமின்றி பிரதிகளைப் பெற்றுக் கொள்வதுடன், புதியவர்களுக்கும் இவ் சஞ்சிகையை அறிமுகப்படுத்துங்கள்.

இப் புதிய வருடத்தில் இருந்து சஞ்சிகை குறித்த உங்கள் ஆக்கபூர்வமான கருத்துக்களையும், நீங்கள் பெற்றுக் கொண்ட ஆசீர்வாதங்களையும் எமக்கு எழுதி அனுப்ப மறவாதீர்கள்.

– ஆசிரியர் –






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சந்தா விபரம்

இச் சஞ்சிகையைத் தொடர்ந்து பெற விரும்புகிறவர்கள் உங்களது பெயரையும், முகவரியையும் தெளிவாக குறிப்பிட்டு சந்தாப்பணத்துடன் ஆசிரியருக்கு அனுப்பி வைத்தால் சந்தாதாரர்களாகச் சேர்த்துக் கொள்ளப்படுவீர்கள்.

## சந்தா விபரம் (தபால் செலவு உட்பட)
## Subscription (Per Year S.L. Rs)

| | |
|---|---|
| இலங்கை **(Sri Lanka)** | **220.00** |
| இந்தியா **(India)** | **390.00** |
| கனடா, அமெரிக்கா **(Canada & USA)** | **840.00** |
| சிங்கப்பூர், மலேசியா **(Singapore & Malaysia)** | **420.00** |
| மத்திய கிழக்கு நாடுகள் **(Middle East Countries)** | **510.00** |
| ஜேர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, அவுஸ்ரேலியா **(Germany, England, Italy & Australia)** | **720.00** |

(காசோலை. காசுக்கட்டளை அனைத்தும் "சீயோன் தேவாலயம்" / **ZION CHURCH** என எழுதப்பட வேண்டும்)

சந்தாதாரராக விரும்பின் பின்வரும் மாதிரிக் கூப்பனை தயார் செய்து சந்தாப்பணத்துடன் சேர்த்து அனுப்பி வைக்கவும்.

---

## சந்தா மாதிரிக் கூப்பன்

பெயர்:..........................................................................

முகவரி:........................................................................

...............................................................................

...............................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




அச்சமைப்பு: வைத்தி பதிப்பகம் - தொ.பே: 0772002351

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org